
பல்சுவை மின்னிதழ்
இதழ்-01
15.05.2020
மருத்துவம் போற்றுதும்
சிங்ககிரித்தலைவன்
சட்டத்தின் சாரல்
என் இதயம்
எழுதும் சொல்
சித்திராங்கதா
'அசுரன்' ஹிட்லர்
பெருவெள்ளத்திற்கான பயணம்

thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

# ஆசிரியர் பதிவு

தமிழர்தம் வாழ்வியலையும் வரலாற்றையும் ஆவணமாக்கும் உயரிய இலக்கோடு 13.04.2016 அன்று ஆரம்பிக்கப்பட்ட துமி அமையமானது சமூக வலைத்தளங்களை அடிப்படையாக்கொண்டு இயங்க ஆரம்பித்தது. உலகளாவிய தமிழ் சொந்தங்களின் அன்பு நிறைந்த ஆதரவினால் அறப்பணிகளையும் ஒருங்கே செய்யும் வாய்ப்பு கிடைத்தது. இப்போது அடுத்த கட்டத்தை நோக்கி அடி எடுத்து வைக்கிறது துமி.

உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் தனித்திருக்கவும் வீட்டிலேயே இருக்கவும் சொல்கிறார்கள். இதனால் பலருக்கும் தாராளமாக நேரம் கிடைக்கிறது. ஆனால் அந்த நேரம் வினைத்திறனாக்கப்படுவதில் வினாக்குறியே எஞ்சுகிறது. இந்த நேரத்தை பொன்னாக்கும் முயற்சி முக்கியமாக்கப்பட்டது. எழுத்தாளர்களும் படைப்பாளர்களும் புதிதாக உதிக்கவும், உள்ளவர்கள் திறனில் நிறை காணவும் களம் அமைப்பது காலத்தின் தேவை என்பதை துமி உணர்ந்தது. அதே நேரம் வற்றிக்கொண்டிருக்கும் வாசிப்புப்பழக்கத்தை பிரவாகமெடுக்கும் பெருவெள்ளமாக மாற்றவும் வேண்டும். இவற்றுக்காக இந்த துமி எடுத்துள்ள புதுப் பயணம் தான் இந்த மின்னிதழ்.

இந்த மின்னிதழில் தொடர் நாவல்கள், கட்டுரைகள், கவிதைகள், விமர்சனங்கள், ஓவியங்கள் என படைப்புக்களை நிகழ்த்தவுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் இளையவர்கள் அதிலும் புதியவர்கள். அவர்களை தட்டிக்கொடுக்க வேண்டியது உங்கள் அனைவரதும் தார்மீக கடமை. வாய்ப்புக்கள் கிடைக்காத கர்ணர்களும், ஏகலைவர்களும் தான் இங்கு அதிகம். பல புதிய பேனாக்கள் எழுதுகின்றன. சில இடங்களில் மை அதிகமாக சிந்தலாம். சில இடங்களில் மை போதாமல் இருக்கலாம். எனவே வழிப்படுத்தி இவர்களை வளமாக்கிக்கொள்ளுங்கள். இங்கு எழுதப்படும் படைப்புக்களை வாசிப்பதோடு நிறுத்திவிடாது விமர்சியுங்கள், ஆலோசனை வழங்குங்கள்.

**செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானுங் கெடும்.**



## ஆசிச்செய்தி

துமி என்னும் அழகுச் சொல் அர்த்தம் நிறைந்தது. துமிகள் பல சேர்ந்தே பல துளிர்கள் உருப்பெறக் காரணமாகிறது. துமி என்ற பெயரில் இளைஞர் வட்டமொன்று, சில வருடங்களாக சில நல்ல காரியங்களை செய்து வருகிறார்கள். அவர்கள் செயல் கண்டு பலர் பாராட்டினர். பயன் தக்க செயலென மெச்சினர். குறிப்பாக ஆவணப்படுத்தலில் இவர்கள் காட்டிய ஆர்வம். இவர்கள் பலருக்கு அறிமுகமாக ஏதுவாயிற்று.

துமி இளைஞர்களின் ஊக்கத்தின் பரிமானமாக துமி பத்திரிகை வெளிவரவிருப்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். மின் பத்திரிகையாக பிறக்கும் துமி நன்றாகப் பிரகாசிக்க வேண்டுமென்று வாழ்துகிறேன். “உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்” என்ற வள்ளுவ வரிகளுக்கு அமைய உயர்ந்த சிந்தனையுடைய இளையவர் உறங்குவதில்லை. அவர்களின் ஊக்கம் அபாரமானது. உள்ளக் கிளர்ச்சி, மனவெழுச்சி, முயற்சி, மனவலிமை, உண்மை உடையவர்கள் இளைஞர்கள். அவர்களைச் சரியான பாதையில் ஆற்றுப்படுத்தினால் அதிக அறுவடையைச் சந்திக்கலாம். ஊக்கமுடைமை யாக்கத்திற்கு கழகு. அரிய பணி தொடர்க. துமி அறநெறியில் நின்று செய்தி சொல்ல வேண்டும். இளைய சமுதாயத்தை இனிய பாதையால் அழைத்துச் செல்லும் திசை காட்டியாக அமைய இறைவனை வேண்டி எனது ஆசிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

-ஆறு.திருமுருகன்.-
தலைவர்,
தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானம்.

## முன் பக்க ஒளிப்படத்தில் ஒளிந்துள்ளவை...!

### புகைப்படவியலாளர்:– செ. சுஜானன்

இந்த பிரபஞ்சத்தின் அடிப்படையே வண்ணாத்திப்பூச்சி விளைவு (Butterfly effect) என்கிறார்கள்.

வண்ணாத்திப்பூச்சி விளைவு எனப்படுவது ஒரு கணித கருத்துரு. இயங்குநிலை (Dynamical system) ஒன்றில் நுண்ணிய தொடக்கநிலை வேறுபாடுகளே அமைப்பின் நீண்ட கால இயக்கத்தில் பெரிய வேறுபாடு கொண்ட விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதுவே பட்டாம்பூச்சி விளைவின் சுருக்கம். ஆரம்பத்தில் உருவாக்கப்படும் மிகச் சிறிய ஒரு செயல், அதன் தொடர்ச்சியான சம்பவங்களால், நாம் எதிர்பார்க்கவே முடியாத மாபெரும் விளைவைத் தோற்றுவிக்கலாம்.

இதன் அடிப்படை ஒழுங்கின்மைக் கோட்பாட்டில் இருந்து ஆரம்பிக்கிறது. ஒழுங்கற்ற ஒரு அமைப்பிலோ/ தொடர் செயற்பாட்டில் ஒரு ஒழுங்கை தேடுவதை விவரிப்பது தான் இந்த ஒழுங்கின்மைக் கோட்பாடு.

ஒழுங்கின்மைக் கோட்பாட்டின் தந்தையான எட்வார்ட் லோரென்ஸ் (Edward Lorenz, 1963) “பிரேசில் நாட்டில் பறந்து கொண்டிருக்கும் ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகின் படபடப்பினால் ஏற்படும் சலசலப்பிற்கும், டெக்ஸாசில் ஏற்படும் சூறாவளிக்கும் தொடர்பு உண்டு” என்றார். இதை அவர் கணித முறைப்படியும் வானிலை மாற்றங்களின்படியும் சரியென்று நிறுவிக் காட்டினார். இதனாலேயே இந்தத் தத்துவம், “வண்ணத்துப் பூச்சி விளைவு” எனப்பட்டது.

நீர் அமைப்பியலில் அளவில் சிறிய துமியானது பல சேரும் போது பெரு வெள்ளமாகும். சில அனுபவம் மிக்கவர்கள் உதவியோடு பல புதியவர்களின் இந்த பத்திரிக்கைப்பயணம் வண்ணாத்திப்பூச்சி விளைவை அடிப்படையாகக்கொண்டு பெரும் ஆக்கபூர்வ விளைவுகளை ஏற்படுத்த வேண்டும் என்பதே துமி குழுமத்தின் பேரவா. அப்போது வண்ணத்திப்பூச்சியை பார்க்கும் இந்த குழந்தையின் புன்னகை எங்கள் அனைவர் முகங்களிலும் பிரதிபலிக்கும்.

# சிங்ககிரித்தலைவன்

ஜீவா ஷஜீவன்

உலகம்,
ஒய்யாரமாய் சுழன்று கொண்டேயிருக்கிறது.
தன்னுள் உள்ளவற்றை ஆக்கி அழிக்கிறது.
உயிர்ப்பின் ஓசையை
பிரபஞ்ச மோனத்தோடு
மோதவிடுகிறது!
எத்தனை தேசங்கள்?
எத்தனை எத்தனை மனிதர்கள்?
சிந்தனை தொலைவு வரை
இதன் சிருஷ்டிப்புக்கள்...
பக்றீரியாவில் இருந்து
பாலூட்டி வரை
தாலாட்டுகிறது உலகம்..,
சுழற்சி முறை பிழைத்துப்போகா
நிகழ்ச்சி நிரல்!
பாட்டிசைக்கும் பறவையினங்கள் - அதை
கேட்டுப்போகும் காட்டாறுகள்...
வலிதாயும் நலிதாயும்
நகரும் விலங்குகள்
உயிர்க்கோலத்தில்
ஊறிக்கிடக்கும் லட்சோப விந்தைகள்

அணுவில் இருந்து
அண்டம் வரை
இவற்றை அடக்கி வைத்தது யாரோ?
முத்து, பவளம், ரத்தினம், வைரம்,
மரகதம், மாணிக்கம் என்று
பலவித திரவியங்களை
பார்த்து எடுத்து கோர்த்தவர் யாரோ ?
இத்தனை நுணுக்கமான
அந்த கலைஞன் யார்?
பூமி என்ற ஜீவிதக்கவிதையை
எழுதிய கவிஞன் யார்?
உயிரை உழுது உணர்வை விதைத்த
உயிரியல் உழவன் யார்?

இதைத்தான் உலகம் தேடுகிறது!
நன்றாக தேடட்டும்! - பூமியின்
மூலை முடுக்கெல்லாம் தேடட்டும்...
யாரது?
அண்டத்தில் தேடுகிறீர்களா?
அங்கும் தேடுங்கள்.
தேடித்தேடி தேடுவதை விடுத்து
எதை எதையோ
எல்லாம் தெரிந்து கொள்ளட்டும்.
விடை கிடைக்காத
இந்த கேள்விக்கு
எத்தனை ஆயிரம் பதில்கள்?
எத்தனை சிந்தனைகள்?

அப்படி இந்தச் சிறியவனின்
தேடலின் பயணத்தில்
சிக்கிய முத்தொன்றைத்தான்
உங்களுக்காக தரப்போகிறேன்...
இது உலகத்தின் ,
ஒரு புள்ளியில் உருவான புதையல்!
ஒரு கள்ளிச்செடியில் வடிந்த அமுதம்...
வரலாறு வரலாறு என்கிறார்களே,
அந்த இறந்து போன
எம்மை கடந்து போன
காலத்தின் ஓசை!
அது சாதாரண ஓசையல்ல,
சஞ்சீவியான ஓசை
திறந்த சாளரங்களுக்குள்
புகுந்து கொள்ளும்
சூரியக்கிரணங்களைப்போல
எம் மனங்களுக்குள்
நுழைந்து கொள்ளும்
ஸ்பரிசமான ஓசை
அதோ அந்த ஓசை
கேட்கவில்லையா?
இது காதால் கேட்கும்
ஓசை அல்ல
கண்களால் விழுங்கி
இதயத்தில் உதயமாகும் ஓசை
மனங்களைச் சலவை செய்து கொள்ளுங்கள்..
அந்த ஓசைக்கருகே உங்களை

நான் அழைத்துச்செல்கிறேன்.
ஒன்று....
இரண்டு...
அல்ல
ஆயிரத்து ஐந்நூற்று ஐம்பது
ஆண்டுகள் என்னோடு
பின்னோக்கி வாருங்கள்..

மன்னர்களும் மணி முடிகளும்
கோட்டை மதில்களும்
அரண்மனைகளும்,
புரவிகளும் வீரர்களும்
புலவர்களும் உழவர்களும்
கலைகளும் கடவுளும்
கண்ணெதிரே வருகிறார்கள்.
காதலைச்சொல்லி
வீரத்தை விதைத்து
பக்தியைப் பதித்த
அந்தப்பழங்கால பெட்டகம்
உங்களுக்காய்த் திறக்கிறது
உள்ளே வாருங்கள்....
எழுத்துக்களால் ஒரு கால இயந்திரம்
தயாராகிறது...

முன்னிகழ்வு
01. மரண இராத்திரி

வள்ளுவன் என்ற
தமிழ் வள்ளல் பிறந்த பின்
ஐந்நூற்றி நான்கு ஆண்டுகள்
உருண்டோடி விட்ட
ஒரு கார்த்திகை மாதம்
பாரதக்கண்டத்தில்
தென்கோடியில் தொங்கும்
ஒரு தேன் கூடு!
இது ஆழமான வரலாறு கொண்டு
நெடுங்காலமாய் நீந்தும்
ஈழம் எனும் எழில்த்தீவு
ஞாலப்பெண் அணிந்து கொண்ட
மூக்குத்தியல்லவா இலங்காபுரி
அதன் மின்னும் அழகுக்கு நிகர்
பொன்னும் மணியும்
வைத்தாலும் ஈடாகாது.

பிறை நிலவு
தோழியரின்றி
தனித்திருக்கும் இரவு
ஆதலால்
அவள் கருமேகப்போர்வையால்
தன்னை இறுக அணைத்து
பெரு மூச்சு விட்டாள்.
பாவம் அவளும்
காதலனைப் பிரிந்தாளோ? என்னவோ?
அவள் எறிந்த மூச்சுக்காற்றின்
வெப்பம் தாங்காது,
குளிர்ந்து உறைந்து கிடந்த
மேகப்பனியெல்லாம்
உருகிப்புளுங்கித்
தூமிக்கத்தொடங்கி விட்டதே!
நேற்றெல்லாம் வானில் பெரிய சண்டை!

வானம் மஹா சக்கரவர்த்தி!
மேகங்கள் எல்லாம் ஏவல் செய்யும்
சிற்றரசர்கள் தானே!
அதிகார ஆசை
யாரை விட்டது?
மேகச்சிற்றரசெல்லாம்

படை கூட்டி
இணைந்து கறுத்தன!
பேரரசை வீழ்த்தும்
வஞ்சக எண்ணத்தில்
வான் அரசை மறைத்து வையத்தில்
தாம் அரசு செய்யப் போந்தன!

விழித்தான் வான் அரசன்!
அகிலம் அதிர உறுமினான்!
எடுத்தனன் மின்னல் வாள்!
அதை எறிந்ததில்
அறுபட்டு மேகங்கள்
ஆங்காங்கே வீழ்ந்தன!
ஒன்றின் வீழ்ச்சி தானே,
இன்னொன்றின் எழுச்சி!
வரப்புகளில் வீழ்ந்த மேகத்தின்
மழை என்னும் உதிரத்தால்,
கரம் உயர்த்தி
முளைத்த நெல் எல்லாம்,
வானரசை தலை சாய்த்து வணங்கின!

அனுராதபுரம் அந்த
ஆனந்த மோகனச்சுகத்தில்
அமிழ்ந்தே போனது!
விறைத்து நின்ற மரங்கள் எல்லாம்
அந்த இருளில் முறைத்துப்
பார்ப்பதைப் போல் இருந்தது!
இப்போது துளிக்கும்
மழையின் சத்தம்
வாழை இலைகளில் பட்டு,
“சக்.. சக்.. சக்.. சக்..”
என்று கேட்டுக்கொண்டே இருந்தது!
அந்த ஓசையை தவிர வேறு
அரவமின்றி அனுராதபுர நகரம்
புத்தனைப்போல் மௌனித்திருந்தது!
நள்ளிரவை நாளிகைகள்
நகர்ந்து எட்டுவதற்கு தயாராகின!
ஆ! இப்போது அந்த
மழைச்சத்தத்தில் ஒரு மாற்றம்!
“சக் சக் ” இப்போது
“டக் டக்... டக் டக்...” ஆம் இது
அனுராதபுர அரண்மனையையும்
பிரதான நகரையும்
இணைக்கும் ராஜ வீதியில்
இருந்துதான் வருகிறது!

அனுராதபுரம்!
இலங்காபுரியின் சுவர்க்க புரம்!
திட்டமிட்ட நகர அமைப்பு!
உயர்ந்த ராஜ நிர்வாகம்!
நிறைந்த பாதுகாப்பு!
ராஜ பரிவாரங்கள் மட்டும் பயணிக்கும்
ராஜ பாட்டையில்
இந்த நடுநிசியில்
உயர் அரேபிய புரவியில்
வருவது யார்?

**வருவான்...**



# கொரோனா வைரஸ் பரவலும் இலங்கையின் நிதித்துறை எதிர்கொள்ள இருக்கும் சவால்களும்

கொரோனா வைரஸ் எனப்படும் (COVID-19) மனித இனத்திற்கும் அதன் சுதந்திரத்திற்கும் எதிரான பாரிய அச்சுறுத்தலாக உருவெடுத்து உள்ளமை அனைவரும் அறிந்ததே. இது உலக நாடுகளின் பல்வேறு துறைகளிலும் பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ள இவ்வைரஸ் இலங்கையிலும் ஒரு நோயாளி என்று தொடங்கியிருப்பினும் நோயின் தாக்கம் இன்று 800இற்கும் மேலான நபர்களை தாக்கியுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளும், தம்மை வல்லரசுகளாக அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் நாடுகளும் நிதித்துறையில் திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் வளர்முக நாடான இலங்கை எவ்வாறான சவால்களை எதிர்நோக்கியுள்ளது, சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றது என்பது பற்றிய சிறு ஆய்வு தொகுப்பு இதுவாகும்.

இங்கு பிரதானமாக பாதிப்புகளை எதிர் நோக்கியுள்ள நிதித்துறையின் துறைகளாக, வெளிநாட்டு முதலீடுகளின் உள்வருகைக்கு பாரிய அச்சுறுத்தலை தோற்றுவித்துள்ளது.

## வங்கித்துறை (Banking Sector)

இலங்கையில் எவ்வாறான நிச்சயமற்ற சூழ்நிலைகளின் போதும் பிரகாசித்துக் கொண்டிருந்த துறை எனில் அது வங்கித்துறையாக தான் இருக்கும். எனினும் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையால் நாட்டில் தனி நபர்கள் தொடங்கி சிறிய நடுத்தர வணிகங்கள் மற்றும் பாரிய வர்த்தக நிறுவனங்களும் பாரிய பின்னடைவையும் வீழ்ச்சியையும் சந்தித்துள்ளன. இதனால் வங்கிகள் தாம் வழங்கிய கடன்களை மீள அறவீடு செய்து கொள்வது தொடர்பாக நிச்சயமற்ற சூழ்நிலை நிலவுகின்றது. இலங்கை மத்திய வங்கியினால் கடனைக் காலம் தாழ்த்தி மீள்செலுத்துவதற்கான சட்ட உரிமை (Loan Moratorium) வழங்கப்பட்டு இருப்பினும், இது கடன் பெற்றவர்களின் கடன் சுமையை தற்காலிகமாக குறைக்க உதவினாலும் ஆக்கக்கூடியதாக 6 மாத கால காலம் தாழ்த்துதலையே அனுமதிக்கின்றது. குறித்த 6மாத காலப்பகுதிக்குள் குறித்த கடன் பெறுனரால் மீண்டெழ முடியுமா? இல்லையா? என்பதும் கடனை மீள் செலுத்த முடியுமா? இல்லையா? என்பதும் கேள்விக்குரிய விடயமே. இதனை விட வங்கிகளின் நிலையான மற்றும் சேமிப்பு கணக்குகளில் மக்கள் முதலிடுவது என்பது கணிசமான அளவில் வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது. இதன் காரணம் அத்தியாவசிய செலவுகளை நோக்கிய பணத் தேவையும் மக்களின் வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியுமே. இதனால் வங்கிகளின் இலாபத் தன்மையில் நீண்ட காலத்தில் கணிசமான வீழ்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் நிலவுகின்றது.




## பங்குசந்தை (Stock Market)

எங்கு என்ன நடந்தாலும் முதன் முதலில் தாக்கத்தை வெளிக்காட்டிடக்கூடிய குறிகாட்டியொன்றாக பங்குசந்தை காணப்படுகின்றது. அதனடிப்படையில் இலங்கையில் 31.03.2020 நாள் இறுதியில் அனைத்துப்பங்குகளின் விலைச்சுட்டெண் (ASPI) கடந்த 5 வருட காலத்துடன் ஒப்பிடுகையில் வரலாறு காணாத வீழ்ச்சியான 20% மேலான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது. இதனை விட 11.05.2020 அன்று பங்குசந்தை தனது செயற்பாடுகளை ஆரம்பித்த சில நிமிடங்களிலேயே S&P SL20, எனப்படும் Standard & Poor's Sri Lanka 20 சுட்டெண் 10% வீழ்ச்சியை பதிவு செய்தமையால் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலையீட்டுடன் உடனடியாக பங்குசந்தை செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இங்கு Panic Trading எனப்படும் நிச்சயமற்ற நிலைமைக்கு எதிரான சந்தையை விட்டு வெளியேற முதலீட்டாளர்கள் முயற்சித்தமையே இந்த நிலைக்கு காரணம் என சந்தை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சாதாரணமாகவே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையின் பங்குச்சந்தையில் முதலீடு செய்ய தயக்கம் காட்டி வருகின்ற நிலையில் இவ்வாறான நிச்சயமற்ற நிலைமைகள் இவ்வாறான பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன .குறித்த கால கட்டத்தில் தனியார் துறையின் உற்பத்தி, முதலீடு என்பன பாதிக்கப்பட்டுள்ளமையால் ஏற்றுமதி பாரியளவான பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது.

## நாணய மாற்று விகிதம் மற்றும் அந்நியச் செலாவணி (Exchange Rate & Foreign Currency)

ஜூலை மாதம் 15ஆம் திகதிவரை ஏறத்தாழ 98 வகையான பொருட்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி அந்நிய செலாவணியை இலங்கைக்கு ஈட்டித்தரும் பிரதானமான வழிகளாக சுற்றுலாத்துறையும், ஏற்றுமதிகளும், வெளிநாட்டு பணமனுப்பல்கள் (Inward Foreign Remittances) காணப்பட்டு வந்த நிலையில் குறித்த மூன்று வழிகளுமே பாரியளவான பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. நாணய மாற்று விகிதத்தைப் பொறுத்தவரையில் வெளிநாட்டு நாணயங்களுக்கெதிரான ரூபாவின் பெறுமதியில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஏற்பட்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது. இது நாட்டின் நிதிநிலைமைக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும் என்பதுடன் வெளிநாடுகளிடம் அரசு பெற்றிருக்கும் கடன்களுக்காக எதிர்காலத்தில் செலுத்தவேண்டிய தொகையை இது அதிகரிப்பதுடன் ஒப்பீட்டளவில் இறக்குமதிகளுக்காக அதிகளவான தொகையை செலுத்த வேண்டிய நிலைமையையும் ஏற்படுத்தும்.

## தனி நபர்கள் மற்றும் வீட்டுத் துறையினர் (Individuals & Households)

தனி நபர்களை பொறுத்தவரையில் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்தருனர்கள் மாதாந்த ஊதியத்தொகை குறைப்பனவு(Paycuts) மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மீதான குறைப்பனவு என்பவற்றை மேற்கொள்ள சிறு நிறுவனங்கள் முதல் பாரிய நிறுவனங்கள் வரை அதிரடி முடிவுகளை மேற்கொண்டு வருகின்றன.இதன் மூலமாக தனிநபர்களும் வீட்டுத்துறையினரும் தமது அதிகரித்த வாழ்க்கைச் செலவுக்கு எதிராகப் போராடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் தனிநபர் வருமானத்துடன் சேர்ந்த வாழ்க்கைத்தரமும் வீழ்ச்சியடைவதற்கான நிலைமைகள் காணப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் EFC (Employers Federation of Sri Lanka) மூலமாக இந்நிலைமையின் பின்னரான தனியார்துறை ஊழியரின் ஆகக்குறைந்த சம்பளமட்டாமாக 14,500 ரூபாவை வரையறை செய்துள்ளது.

## அரச வருமானம் மற்றும் செலவினம்

(Government Income & Expenditure)

அரச வருமானங்களை பொறுத்தவரையில் எந்தவொரு நாடாக இருப்பினும் பிரதான வருமான மூலமாக அமைவது வரி வருமானமாகும். தனியார் துறை நிறுவனங்களின் இலாபதன்மைகளில் ஏற்பட இருக்கும் வீழ்சியினால் வரி வருமானங்கள் பாரிய வீழ்ச்சியை சந்திக்கும். இதற்கு மேலதிகமாக புதிய முதலீடுகளை ஊக்குவிக்கும் முகமாக வரிச் சலுகைகளை வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் அரச துறைக்கு ஏற்படுவதனாலும் வரி வருமானங்கள் குறைவடையும்.

அரச செலவினங்கள் எனும்போது சுகாதார மற்றும் பொதுநல சேவைகள் மீதான அரச செலவினமே அதிகரித்த செலவினமாக அமைய உள்ளதுடன் குறித்த செலவினங்களுக்கென வெளிநாடுகளிடம் பெற்ற கடன் மீள் செலுத்துகைகளும் அவற்றுக்கான வட்டியும் கணிசமான செலவினங்களை ஏற்படுத்தும்.

இறுதியாக கூறின் 'தக்கன பிழைத்தல்' (Survival of the Fittest) என்பது போன்று சரியான திட்டமிடல்களுடனும் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடனும் செயற்படின் மட்டுமே நிலைத்திருக்க முடியும் என்ற நிர்ப்பந்தத்திற்கு ஒவ்வொரு துறைகளும் முகம் கொடுத்துள்ளன.

K.ஹிருபிகன்
counting & Business, Dip.in HRM ,
ACCA-UK (Reading), BBM (Reading)

# சால் பெருங்கேள்வியன்

த. திருமாறன் M.A.,M.Phil.
முனைவர் பட்ட ஆய்வாளர்
மாநிலக் கல்லூரி
சென்னை

கம்பன் காவியம் ஒரு பெரியகடல். அந்தக் கடலில் இராமன், இராவணன் போன்ற திமிங்கலங்களும் உண்டு. அனுமன், அங்கதன், வீடணன், கும்பன், இந்திரசித்தன் போன்ற பல வேட்டை மீன்களும் உண்டு. அதே கடலில் தான் மூழ்கி, மூச்சடக்கி, தேடி, ஓடுடைத்து, பட்டைத் தீட்டினால் மட்டுமே வெளிப்படக் கூடிய சில முத்துக்களும் உண்டு.

காப்பியத்தில் மாபெரும் பாத்திரங்களைக் கொண்டாடுகிற நாம், அதேக் காப்பியத்தில் வெளிப்படுகிற சில பாத்திரங்களை கண்டு கொள்வதுகூட கிடையாது. நம்மால் மட்டுமல்ல, காப்பியத்தினுள்ளும் கூட கண்டு கொள்ளப்படாமல் அலட்சியப்படுத்தப்படும் பாத்திரங்கள் உண்டு. அப்படிக் காப்பியத்தில் அறிமுகப்படுத்தும் போதே அலட்சியபடுத்தப்படுகிற ஒரு பாத்திரம் தான் நீலன்.

சுக்கிரீவன் நீலனை இராமனுக்கு அறிமுகம் செய்வதாகக் கம்பன் இப்படி எழுதுகிறான்:
"ஆறு பத்து ஏழு கோடி அனீகர்க்கு
ஏறு கொற்றத் தலைவர் இவர்க்கு முன்
கூறு சேனைப் பதி கொடுங் கூற்றையும்
நீறு செய்யும் நீலன்" என்று ஓதினான்.

இராமா உன் முன் நிற்கிறானே "இவன் ஒட்டுமொத்த வானரப் படைக்கும் சேனாதிபதி, உலகத்து உயிர்களையெல்லாம் கவரக்கூடிய எமனின் உயிரையே கவரும் ஆற்றல் பெற்ற மாபெரும் வீரன், இவன் பெயர் நீலன்." என்று ஒரு கதாநாயகனுக்குத் தரும் அறிமுகத்தைப் போல நீலனுக்கு தேர்ந்ததொரு முன்னுரையைக் கூறுகிறான் சுக்கிரீவன்.

நியாயமாக, இராமன் இந்த அறிமுகத்தை கேட்டவுடன் என்ன செய்திருக்க வேண்டும்? "ஓ! அப்படியா...?" என்று வியப்போடு பேசியிருக்க வேண்டும். ஒரு மரியாதைக்காவது அவன் ஆற்றலை பாராட்டியிருக்கவேண்டும். அதுதானே இயல்பு. ஆனால் இராமன்,
"நின்று இனிப் பல பேசி என்னோ நேறி
சென்று இழைப்பன சிந்தனை செய்க"
என்று பேசிவிடுகிறான்.

"இப்படியே நின்றுப் பேசிக் கொண்டிருப்பதனால் என்ன பயன், போய் இனி செய்ய வேண்டியதை பற்றி யோசியுங்கள் என்று நீலனை அலட்சியப் படுத்தி விடுகிறான் இராமன்.

இப்படி நம் கண்களில் மட்டுமல்ல, இராமனின் பார்வையிலும் கூடப்படாத பாத்திரமாகத் தான் நீலன் காப்பியத்தில் வெளிப்படுகிறான். நீலனை குறிப்பிடுகிற கம்பன் "சால் பெருங்கேள்வியன்" என்று குறிப்பிடுகிறான். 'சால்' என்றால் 'போர்' என்று பொருள். 'கேள்வியன்' என்றால் 'அறிஞன்'. ஆக சால் பெருங்கேள்வியன் என்றால் 'போரியல் பேரறிஞன்' என்றுப் பொருள். போரியல் பேரறிஞன் என்ற பட்டம் எவ்வளாவு உயர்வானது....! அந்தப் பட்டத்தை கம்பன் தன் காப்பியத்தில் தருவதற்கு ஆட்களே இல்லையா என்ன..?

இராமன் இருக்கிறான், இலக்குவன் இருக்கிறான், அனுமன், இராவணன், கும்பன், இந்திரசித்தன் என்று பலர் இருக்கிறார்கள். ஏன் அண்ணனிடமிருந்து பிரிந்து வந்து, போரில் இராமன் வெற்றிக்கு பல ஆலோசனைகளை வழங்கிய வீடணன் இருக்கிறான். இவர்ளையெல்லாம் விட்டுவிட்டு காப்பியத்தில் ஆங்காங்கே தோன்றி மறையும் நீலனை எதற்கு கம்பன் 'போரியல் பேரறிஞன்' என்று குறிப்பிட வேண்டும்.

காரணம் இல்லாமல் எதையும் சொல்பவனல்லன் கம்பன்.

இராமன், இலக்குவன், அனுமன், இராவணன், வீடணன், இந்திரசித்தன் போன்றோரெல்லாம் அரச குலத்தில் பிறந்த அரன்மனை வாசிகள். போரை ஒரு கலையாக பயின்று, வீரர்கள் என்ற நிலையில் இருப்பவர்கள். ஆனால் நீலன் போருக்காகவே தன்னை முழுதும் அர்ப்பணித்த ஒரு படை வீரன். அவன் போரில் சண்டை போடுகிற சாமனியப் படை வீரன் மட்டுமல்லன் கோடிக்கணக்கான படைவீரர்களுக்கு தலைமைத் தாங்கும் சேனாதிபதி. "வாழ்க்கையில் எப்போதாவது போரை சந்திக்கிற அரண்மனை வாசிகளைக் காட்டிலும், போரை மட்டுமே வாழ்க்கையாக சுவாசிக்கிற படைக்கலவாசிக்குத் தான் போரின் நுட்பங்கள் தெரியும்." எனவேதான் இராமனைக் கூட வீரன் என்று குறிப்பிடுகிற கம்பன். நீலனை 'சால் பெருங் கேள்வியன்' (போரியல் பேரறிஞன்) எனக் குறிப்பிடுகிறான்.

இலங்கைக்குள்ளே நுழையும் போரில், இலங்கையினுடைய மதில்களை சுற்றிவளைத்து வானரப்படை தாக்குதல் நடத்துகிறது. இராமன் படைத் தலைவனாக நீலன் நிற்க, இராவணன் படைத்தலைவனாக 'பிரகத்தன்' என்பவன் நிற்கிறான். பிரகத்தனுடைய நாண் ஒலி கேட்டதற்கே வானரப்படை நடுங்குகிறது. பிரகத்தன், போர் என்ற வார்த்தையைக் கேட்டே பூரிக்கக் கூடியவன் என்கிறான் கம்பன்.

'நீலன் ஓர் போர் அறிஞன் என்றால், பிரகத்தன் ஒரு போர் பித்தன்.' பிரகத்தன் ஒரு மாபெரும் பலசாலி. பிரகத்தன் களத்தில் இறங்கியவுடன் வேறு யாரையும் அவனோடு மோதவிடாமல் நீலனே அவனோடு மோதுகிறான். மிகக் கடுமையானப் போர். தேவர்கள் வாய் பிளக்க, பார்ப்பவர்கள் பயந்து நடுங்க வெகு நேரம் நீடிக்கிறது அந்த சண்டை. கடைசியில் நீலன் பிரகத்தன் மார்பில் ஓங்கி ஒரு குத்துவிட சுருண்டு விழுகிறான் பிரகத்தன். வானரங்கள் ஆர்ப்பரிக்க இராமன் அணிக்கு முதல் வெற்றி கிடைத்தது. ஊர் புறங்களில் மக்கள், சண்டை என்று வந்தால் முதல் அடி நம்முடையதாக இருக்கவேண்டும் என்பார்கள். அது ஓர் உளவியல். எவ்வளவு பெரிய பலசாலியாக இருந்தாலும் கூட முதலடியில் சற்றே நிலைகுலைந்து போவான். அந்த தடுமாற்றாத்தில் தான் எதிரியை மேலும் தடுமாறச் செய்கின்ற சூட்சமம் ஒளிந்திருக்கிறது. பிரகத்தனை வீழ்த்திய நீலனின் அடி அத்தகையது.

பிரகத்தனின் வீழ்ச்சி தான் இராவணப் படையை முதன் முதலில் தடுமாறச்செய்தது. இராவண சாம்ராஜியத்தை தரைமட்டமாக்கியது இராமன் என்றால், அதை தடுமாறச் செய்தவன் நீலன். அதை காப்பியத்தை படிக்கிற நாம் புரிந்து கொண்டோமோ இல்லையோ. இராமன் புரிந்து கொண்டான். எனவே தான் சீதையை மீட்டு புஷ்பக விமானத்தில் அழைத்து செல்லுகிற இராமன். இலங்கையை கடக்கிற போது,
கீழை வாயில் வர பிரகத்தன், நீலன்
நலம் கிளர் கையின் மாண்டது இவன்
என்று சுட்டிக் காட்டி, இங்கு தான் பிரகத்தன் என்பவனை, நீலன் என்ற வீரன் தன் அழகிய கைகளால் கொன்றான் என்று அந்த முதல் வெற்றியை நினைவு கூறுகிறான்.

இராமன் "எந்த நீலனை அறிமுகப்படுத்தும் போது இராமன் அலட்சியப்படுத்தினானோ, அதே நீலனை சீதைக்கு இராமன் சுட்டிக்காட்டுவது காப்பிய விந்தை.'



# கொரோனா காலத்து நினைவுகள்

**சமூக முற்றடக்க காலத்தில் எமது சிந்தனைகளையும் முற்றடக்காமல் முடங்கியிருந்த நாட்களில் அடங்கியிருந்த விடயங்களை நினைவுகளாய் கோர்த்திட பேஸ்புக் தளத்தில் தூமி கோரி பெற்றதை நேர்ப்படுத்தி இம்மின்னிதழில் தொடர்ச்சியாய் வெளியிடுகிறோம்.**

## கொரோனா டயரீஸ் – ஏப்ரல் 1



ஒஸ்லோவிலிருந்து...
என்.சரவணன்

இன்று ஏப்ரல் முதலாம் திகதி. இன்றுடன் மூன்று வாரங்களுக்கு மேலாக நாங்கள் நால்வரும் வீட்டுக்குள் முடங்கி இருக்கிறோம். இன்றில் இருந்து இந்த நாட்குறிப்பை பதிவு செய்வது என்கிற முடிவுக்கு வந்ததற்குக் காரணம் நான் மட்டுமல்ல சில நண்பர்களின் வேண்டுகோளும் தான்.

எங்கள் வீட்டு கதவுகளும், ஜன்னல்களும் வெளியில் இருந்து காற்று கூட உட்புகாத படி இறுக்கி மூடப்பட்டிக்கின்றன. குளிர் நாடென்கிறபடியால் பொதுவாகவே குளிரிலிருந்து பாதுகாக்க இப்படி குளிர் வராத அளவுக்கு மூடியிருப்பது எங்களுக்கு புதிதில்லை. ஆனால் இப்போது கொரோனா பீதியும் சேர்ந்து அந்தத் தேவையை இரட்டிப்பாக்கியிருக்கிறது.

**நினைவு 1**

**உணவு**

உணவின் சிக்கனத்தையும், உற்பத்தியையும், தன்னிறைவையும், அதன் தரத்தையும், பற்றி உலகமே உரையாடிக்கொண்டிருக்கும் ஒரு காலத்தை கொரோனா ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கிற காலத்தில் மலிவாகவும், வீட்டிலேயே இலகுவாக தானிய முளைப்பயிர் உற்பத்தி செய்வது குறித்த எனது அனுபவத்தை இன்று ஒரு காணொளியாக செய்து Youtube இல் ஏற்றி முகநூலின் மூலம் பகிர்ந்து கொண்டேன். ஆரோக்கியமான, ஊட்டச்சத்துக்கள் நிறைந்த, செரிமானத்துக்கு உதவக்கூடிய இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்தக்கூடிய, இதய நோயுள்ளவர்களுக்கு உதவக் கூடிய ஒரு உணவு வகை இது. எளிமையான செலவு குறைந்த ஒரு உணவும் கூட. அதன் முக்கியத்துவத்தை சிலர் மெச்சினாலும் அந்தக் காணொளி பகிரப்படாதது சற்று வியப்பை அளித்தது.

**குழந்தைகள்**

சுறுசுறுப்பாக எப்போதும் ஓடியாடி விளையாடும் என் குழந்தைகள் இருவரும் கூட வீட்டுக்குள்ளேயே சைக்கில் ஓட்டி விளையாடுகிறார்கள். இன்று 6 வயது ஜென்னியும் 3 வயது சோபியாவும் வீட்டுகுள்ளேயே துணிகளை விரித்து அதில் பிளாஸ்டிக் உணவுப் பண்டங்களையும், விளையாட்டுப் பொருட்களையும் வைத்து பிக்னிக் போவதாக விளையாடுகிறார்கள்.

ஜென்னி பாடசாலையில் முதலாம் ஆண்டு வகுப்பை கடந்த ஓகஸ்ட் மாதம் தொடங்கினாள். கடந்த மார்ச் 13ஆம் திகதியிலிருந்து நோர்வேயில் பள்ளிகூடங்கள் மூடப்பட்டுவிட்டன. முதலில் இரு வாரங்களுக்கு என்று அறிவிக்கப்பட்டு இருந்தாலும் மீண்டும் அது ஏப்ரல்13 வரை என்று நீடிக்கப்பட்டிருக்கிறது.

பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்கு முதலாம் ஆண்டிலேயே இங்கு Ipadஐ கொடுத்து விடுகிறார்கள். ஆரம்பத்தில் நான் கூட இதனை ஆரோக்கியமாகப் பார்க்கவில்லை. குழந்தைகள் எழுதும் ஆற்றலை பலவீனப்படுத்தப்போகிறது, Ipadக்கு அடிமையாகப் (adict) போகிறார்கள், விளையாட்டுகளிலும், அவர்கள் விரும்பிய Appகளை நுழைத்து வீணாகப் போகிறார்கள் என்றெல்லாம் பயம் இருந்தது.

ஆனால் இதன் பயன்கள் நம் எண்ணத்தை தலைகீழாக மாற்றியிருக்கிறது. மிகவும் வினைத்திறன் மிக்க வகையில் அவர்களுக்கான பாடங்கள் அதில் உள்ளன. நோர்வேஜிய, ஆங்கில மொழிகள், கணக்கு, ஓவியம், இயற்கை உள்ளிட்ட பல வீட்டுப்பாடங்களையும் அவர்களுக்கு அதில் அனுப்பி விடுகிறார்கள் வீட்டில் இருந்து அதைச் செய்து முடித்ததும் நட்சத்திர அடையாளம் இட்டுவிட்டால் அது வகுப்பாசிரியருக்கு கிடைத்து விடுகிறது.

குழந்தைகள் வீட்டிலிருக்கும் இந்த நாட்களில் பாடசாலை இயங்குகிறது என்று தான் கூறவேண்டும். நாளாந்தம் குழந்தைகளுக்கான பாடங்கள் அனுப்பப்படுகின்றன முடித்தவற்றை உடனடியாகவே பார்த்து ஆசிரியர் பதிலளித்துவிடுகிறார். அது மட்டுமன்றி அவர்களுக்கான உடல் பயிற்சிக்குரிய பாடங்களும் உண்டு. ஆசிரியர் இன்று என்ன செய்யா வேண்டும் என்பதை ஒரு வீடியோ பதிவில் பகிர்கிறார். மாணவர் அதனை அப்படியே செய்து மீண்டும் வீடியோ பதிவாக திருப்பி அனுப்ப வேண்டும். இன்று Toilet Paper சுருளை ஒரு பக்கற் ஒன்றில் மூன்றடி தள்ளியிருந்து பாதங்களில் வைத்து சரியாக இடுவதை செய்து அனுப்பியிருந்தார். ஜென்னியும் அதை அப்படியே செய்வதை வீடியோவாக எடுத்து அனுப்பினேன். உரிய நேரத்துக்குள் பாடங்கள் கிடைக்காவிட்டால் பெற்றோருடன் தொடர்பு கொள்கிறார் ஆசிரியர்.

அரச தொலைக்காட்சியை தினசரி 9-11 வரை பார்க்க வேண்டும் என்பதும் அவர்களுக்கு இந்த கொரோனா நாட்களில் கொடுக்கப்பட்டுள்ள பாடங்களில் ஒன்று. தொலைக்காட்சியில் முதலாம், இரண்டாம் ஆண்டு கற்கும் குழந்தைகளுக்கு பல விடயங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. கதைகள், பாடல்கள், கேள்வி பதில்கள், கைப்பணிகள் செய்வது, சில எளிமையான விஞ்ஞான முயற்சிகள் எல்லாம் அதில் அடங்குகின்றன. இன்று ஆடுவதற்கான சில ஸ்டெப்களும் அதில் உள்ளடங்கியிருந்தது.

வகுப்பாசிரியர் புதன் கிழமைகளில் பெற்றோருடு உரையாடுகிறார். வெள்ளிக்கிழமைகளில் வகுப்பு மாணவர்கள் அனைவருடனும் சேர்ந்து குழுவாக வீடியோ சம்பாசணை செய்கிறார்.

வகுப்பாசிரியருக்குப் பதிலாக பெற்றோர்களே பிள்ளைகளுக்கு வகுப்பாசிரியர்களின் இடத்தில் இருந்து கவனிப்பதால் பெற்றோருக்கும் நேரம் அதில் கடந்து விடுகிறது. சிறு குழந்தைகளை வைத்திருக்கும் பெற்றோர்களுக்கு இப்படி நேரம் போக்க வலி கிடைத்திருப்பது பல அவர்களை சோரவில் இருந்தும் மீட்கிறது. குழந்தைகளுடன் இருக்கும் நேரம், அவர்களுடனான தொடர்பாடலை வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பு எல்லாம் நிறைவேறுகிறது.

நானும் துணைவியும் மாறி மாறி இதனை செய்துகொள்கிறோம். அதன் பின்னர் தான் சமையல். பெரும்பாலும் இந்த நாட்களில் கூட்டுச் சமையல் தான்.

**“குழந்தைகள்”**

**சுயவதை நாடி...**

ஆனால் செய்திகளை அடிக்கடி ஓடிச்சென்று பார்த்துவிட்டு மன உளைச்சலை ஏற்படுத்திக் கொள்வது விரும்பாமலே நடக்கும் கட்டாயப் பணி. ஒரு வகையில் சுயவதை தான்.

எந்த நேரமும் இருக்கும் நாட்டின் நிலைமை குறித்து தேடச் செய்கிறது. கொரோனா எந்தளவு எங்களை அண்மித்துக் கொண்டிருக்கிறது என்கிற பீதியை கணக்கிட்டுக்கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. அடுத்தது உலக நிலையை அறிவது. அடுத்தது நம் சொந்த நாட்டின் நிலையை அரிது கொள்வது. உடல் இங்கிருந்தாலும் உயிர் நம் தேசத்தில் அல்லவா வாழ்ந்து கொண்டிருக்கிறது. பின்னெப்படி ஆபத்தின் வடிவத்தையும், அளவையும் அளவிடாமல் இருப்பது. எனவே இந்த சுயவதையை தெரிந்தே செய்துகொள்ள வேண்டியிருக்கிறது.

இன்றைய கொரோனா - மொத்த தொற்றும் மரணமும்
உலகம் - 932,613 (46,809), நோர்வே -4878 (44), இலங்கை 146 (2)

“நம்பிக்கையில் தான் ஒவ்வொரு அடுத்த கனமும் நகர்கிறோம்! நம்பிக்கையை கைவிடாதீர்கள்”

# என் இதயம் எழுதும் சொல்

மாயா

"புலராத காலை தனிலே" சித்ஸ்ரீராமின் குரல் ஒரு புறம் உருகிக் கொண்டு இருக்க வேலைக்கு செல்லுவதற்கு தேவையான ஆயத்தங்களை பரபரப்பாக ஓடி செய்து கொண்டு இருந்த ஆராதானாவை பார்த்தவாறு கட்டிலில் சாய்ந்திருந்த அவளது அறைத் தோழியின் உதடுகளில் ஒரு நக்கல் சிரிப்பொன்று நெளிந்து கொண்டிருந்தது. "இங்க பாருடி. நானே நேரம் போகுது என்று ஓடிட்டு இருக்கேன். காலையிலயே இப்பிடி மூஞ்சிய நக்கலா வச்சு என்னைக் கடுப்பாக்காத சொல்லிட்டேன்" என்று ஒரு விரல் நீட்டி அவளை எச்சரித்தவாறு மறுபடியும் ஒரு கோப்பினை தேடி உள்ளே ஓடினாள்.

"இதென்னடி வம்பா இருக்கு? நேற்று நடுராத்திரில போன்ல கூப்பிட்டு இன்டைக்கு ஒரு அவசரமான வேலை இருக்கு. கொஞ்சம் நேரத்துக்கு வாங்க என்று சொன்ன உன் முதலாளியை போய் பேச வேண்டியது தானே? சிவனே என்று இருக்கிற என்னில பாயுற. க்கும்.. உங்களுக்குலாம் ஃப்ரெண்ட்ஸ் தானே ஊறுகாய் எப்பயுமே" என்று அவள் சென்ற திசையை நோக்கி கத்தியவளை நோக்கி ஒரு பிளாஸ்டிக் போத்தல் ஒன்று சர்ர் என்று பறந்து வந்தது.

நண்பியை அறியாத தோழியா அவள்? வந்த போத்தலை அலேக்காக பிடித்துவிட்டு "வாவ்! செம நிலா" என்று தன்னைத்தானே பாராட்டிக் கொண்டு இருந்த இடைவேளையில் அவளை நோக்கி வந்து நங்கென்று அவளது நடு உச்சி மண்டையிலேயே குட்டிய ஆராதனாவை "அம்மா!" என்று அலறியவாறே முறைத்தாள். "என்னடி முறைப்பு? என் கஷ்டத்த பார்த்தா உனக்கு சிரிப்பா இருக்கா? இவ்வளவு பேசுறவ இன்டைக்கு ஒருநாள் சரி சமைச்சு எனக்கு உதவி செய்து இருக்கலாம் ல? அதவிட்டுட்டு என்னை நக்கலடிசுட்டு இருக்க?" என்று இன்னொரு குற்றத்தை அவள் மேல் சுமத்திவிட்டு சுவாமி அறையினுள் நுழைந்தாள். "நான் செய்யுற ஏதாச்சும் உருப்படியா வந்தா தானே? அப்படி வந்து இருந்தா நான் ஏன் இப்பிடி இருக்க போறன்" என்று முணுமுணுத்தவளை "நிலா" என்று அதட்டியவாறு வெளியே வந்தவள் மேலும் அவளை யோசிக்க விடாமல் "சரி. நீ கவனமா வேலைக்கு வெளிக்கிடு. சமைச்சு கட்டி வைச்சு இருக்கேன். எடுத்துட்டு போ. போறப்போ கதவை லாக் பண்ணிடு" என்று அவளுக்கு படபடவென உத்தரவுகளை கூறியவாறே வெளியே சென்றாள். சென்றவளை பார்த்து இருந்த நிலாவின் முகம் மென்மையாக மாறியது. அவள் ஆராதனா. நிலாவின் பல்கலைக்கழக தோழி. படிப்பு முடிந்ததும் கொழும்பிலேயே இருவருக்கும் வேலை கிடைத்துவிட இருவருமே இந்த அடுக்குமாடிக்குடியிருப்பில் வாடகைக்கு வந்துவிட்டனர். நிலா ஆராதனாவுடன் ஒரு வருடம் தங்கியிருந்து பின்னர் இரண்டரை வருட இடைவெளியின் பின்னர் ஆறு மாதங்களுக்கு முன்னர் தான் மீண்டும் ஆராதனாவுடன் இணைந்து கொண்டாள். தலையைக்குலுக்கி நினைவுகளில் இருந்து வெளியில் வந்தவள் நேரமாவதை உணர்ந்து தானும் வேலைக்கு தயாராக தொடங்கினாள். நேரம் ஆறரை தான். இருள் விலகி சூரியன் வெளிச்சம் அடுக்குமாடிகளின் இடையில் கிடைத்த இடைவெளியில் மெல்லிய கீற்றுக்களாக வீதியில் படரத்தொடங்கி இருந்தது. ஆங்காங்கே இருந்த சில பூமரங்களின் இலைகளின் நுனியின் தேங்கியிருந்த பனித்துளிக்குள் முழுவுட்தெறிப்பிற்கு ஆளாகி அவற்றை வைரக்கற்களாக காட்டிக்கொண்டு இருந்தது. அழகிய காலைவேளையில் அழகாக மடிப்பெடுக்கப்பட்டு உடலைத்தழுவியிருந்த கறுப்பு நிறபுடவையின் நுனியை சற்று தூக்கிப்பிடித்தவாறு முன்னிரவு பெய்திருந்த மழையின் ஈரம் போகாதிருந்த தரையில் புடவை நனையாததை உறுதிப்படுத்தி சென்று கொண்டிருந்த ஆராதனா தன் முன்னால் கடும் நீலநிறத்தில் வந்து நின்ற ரோல்ஸ் ரொய்ஸை சத்தியமாக எதிர்பார்க்கவில்லை. அவளது முதலாளியின் வாகனம். ஓட்டுனர் இருக்கையில் இருந்து இறங்கி வந்த டிரைவரின் காலை வணக்கத்தை சிறுபுன்னகையுடன் ஏற்றுக்கொண்டவள் அவர் திறந்து விட்ட கதவின் வழியாக உள்ளேறினாள். அமர்ந்தவள் அவளுக்கு அடுத்து அவளருகே அமர்ந்து இருந்த முதலாளியை நோக்கி காலை வணக்கம் கூற அதை அழுத்தமான தலை அசைப்பின் மூலம் ஏற்றுக்கொண்ட ஆதித்யன், "அண்ணாமலை" என டிரைவரை விளித்தவுடன் கார் பிரதான வீதியை வழுக்கிக்கொண்டு அடைந்து பின்னர் வேகமெடுத்தது.

ஒரு பெருமூச்சுடன் வழக்கமாக் முகத்தில் ஒட்டிக்கொள்ளும் புன்னகையை ஒட்டிக்கொண்டவள் அவனை நோக்கி திரும்பி
"என்ன வேலை சார்? இவ்வளவு அவசரமா?"
"மிஸ்.ஆராதனா நம்ம அடுத்த மாதம் வெளியிட இருந்த சாஃப்ட்வெயரை (மென்பொருளை) நேற்று ஒரு கம்பனி வெளியிட்டு இருக்குது. மார்க்கெட்டுக்கு வந்த பிறகு தான் தெரியும். முன்னமே தெரிஞ்சு இருந்தா நிறுத்தி இருப்பேன். எப்படி மிஸ் ஆயிச்சு என்று தெரியல." அவளுக்கும் அது தெரியும். முன்னரே தெரிந்து இருந்தால் விட்டிருக்கவே மாட்டான். ஒவ்வொரு போட்டிக் கம்பனியிலும் ஒவ்வொரு ஒற்றர்கள். வியாபார உலகில் ராஜா தான் இவன் என்று இவளே நிறைய தடவை நினைத்தது உண்டு. அவன் ராஜா என்றால் இவள் மந்திரி ஆகிறாளே! அவனது காரியதரிசி. அவன் எள் எனும் முன் எண்ணையாகி நிற்பாள். அதற்கு பழக்கப்படுத்தியவனும் ஆதித்யனே! நான்கு வருடங்களில் அவளது திறமைகளை நன்றாக செதுக்கி இருந்தான். ஆனால் அதற்காக அவள் தொலைத்த இரவுகள் எண்ணிலடங்காதவை.

அவன் பிரச்சனையை கூறியவுடனே ஆதித்யனுடைய அன்றைய நிகழ்ச்சித்திட்டத்தை பார்வையிட்டவள் முக்கியமான எதுவும் இல்லாத காலை நேரப்பகுதிக்குள் உடனடி கூட்டத்தை உட்புகுத்தினாள். பின்னர் அதற்கான தகவலை அதனுடன் தொடர்புடைய மனேஜர் மற்றும் டீமிற்கு மென்பொருளிற்கு உள்ளாகவே தகவலாக அனுப்பியவள் தகவலை ஆதித்யனின் அக்கௌன்டிற்கும் அனுப்பி வைத்தாள். மொபைலில் வந்த நோட்டிஃபிகேஷனை (Notification) எடுத்து பார்த்தவன் கண்ணில் கூலர்ஸை அணிந்தவாறே "பிரதீப்பையும் கூப்பிடுங்க மிஸ்.ஆராதனா" என்று விட்டு மொபைலில் எதையோ ஆராய தொடங்கினான். "ஓகே சார்" என்ற ஆராதனாவும் பிரதீப்பை அழைத்து விடயத்தை கூறிவிட்டு வெளிவந்த மென்பொருள் தொடர்பான விவரங்களை பார்வையிட தொடங்கினாள்.

பிரதீப் ஆதித்யனின் கல்லூரி நண்பன். ஆதித்யனின் நெருங்கிய நண்பனும் கூட. ஆனால் கம்பனி என்று வரும் பொழுது இவன் உரிமையாளன் அவன் கம்பனியின் தலைவன் பதவியில் இருப்பவன். அனைத்து ப்ரொஜெக்டுகளும் பிரதீப்பின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். இந்த மென்பொருள் தயாரிப்பு மட்டுமன்றி நிறைய உற்பத்தி தொழிற்சாலைகளும் ஆதித்யனின் கட்டுப்பாட்டில் இருந்தது.
நேற்று வெளிவந்து இருந்த மென்பொருளின் அனைத்து தொழிற்பாடுகளும் அப்படியே இவர்களது திட்டத்துடன் ஒத்துப்போவதை பார்த்தவுடன் ஆதாதனாவுக்கே ஒரு நிமிடம் தலை சுற்றித்தான் போனது. தலையை சற்று அழுத்திக்கொண்டவள் வெளிவந்து இருந்த மென்பொருளை பற்றிய விபரங்களை தரவிறக்கம் செய்து கொண்டாள்.
"மிஸ்.ஆராதனா!"
"யெஸ் சார்?"
"எங்க பிழை என்று தெரிஞ்சுதா?"
"யெஸ் சார். நம்ம கம்பனியிலேயே யாரோ ஒருத்தங்க நியூஸ் பாஸ் செய்து இருக்காங்க. இல்லாட்டி அதே தொழிற்பாட்டோட ஒரு மென்பொருள் சான்ஸே இல்ல"
"யா. இம்மீடியட்லி யார் என்டு கண்டுபிடிங்க"
"யெஸ் சார்"
இந்த உரையாடலில் அவளது புன்னகை மட்டும் எந்த நிமிடமும் அணைந்து விடவில்லை. அது காரியதரிசிகளின் எழுதப்படாத சட்டம். அதை அச்சு பிசகாமல் தொடருவாள் இவளும். சற்று நேரம் இருவரும் அவரவர் யோசனையில் அமைதியாகி விட்டனர்.

**தொடரும்...**



சஹானா

# வேள்பாரியும் நாவல் மரமும்

விக்கி சாரங்கன்

சங்க இலக்கியப்பாடல்களில் புதைந்து கிடக்கும் பாரியின் சிறப்புகளை தேடி எடுத்து தன் கற்பனையும் புகுத்தி விரியும் பெரும் நாவலாய் தந்திருக்கிறார். சு.வெங்கடேசன்.

என்னளவில் நாவல் இலக்கியம் காதல் போல் அதன் சுவை நெடிய பாதை வழியே தெவிட்டா ஈர்ப்போடு அழைத்து செல்ல வேண்டும். ஒவ்வோர் பக்கங்களை புரட்டும் போதும் இதழ் கவ்விய முத்தங்களைப்போல் அதன் சுவை இனிப்பா, துவர்ப்பா, கசப்பா எனத்தூண்டிட வேண்டும்.

வேள்பாரியின் ஒவ்வோர் பக்கங்களை புரட்டும் போது சில தகவல்கள் ஆச்சரியமூட்ட வைத்தன. அவை புனைவாகவே இருக்கட்டும். வேள்பாரி முழுதும் நாவல் மரம் பற்றிய செய்திகள் விரவிக்கிடக்கின்றது. நாவலாசிரியர் குறைந்தது 7,8 வகை நாவற் பழங்கள் பற்றி குறிப்பிடுகிறார். ஒவ்வோர் நாவலும் தனித்தனி சுவை என சொல்கிறார்.

- பூ நாவல்
- கொடி நாவல்
- சிறகு நாவல்
- நரி நாவல்
- வெண் நாவல்
- நீர்நாவல்
- சிறு நாவல்



இவை ஏனோ நாவல் பற்றிய என் தேடலை தொடக்கிவிட்டது. வேறுபட்ட சுவை கொண்ட சுவை கொண்ட நாவல்களை சுவைத்திருக்கிறேன். ஆயினும் அவற்றை இவ்வாறு பெயரிட்டு அழைப்பதை நான் கேட்டதில்லை. வெண் நாவலை தனித்து அடையாளப்படுத்துவதை கண்டிருக்கிறேன்.

சரி பண்டைத்தமிழ் இலக்கியங்களில் நாவல் பற்றிய செய்திகளை தேடத்தொடங்கிய போது என் தேடலுக்குள் இவை தென்பட்டன.நாவல்பழம் உவமையாகவும், உணவுப்பொருளாகவும் பயன்படுத்தப்பட்ட செய்திகள் கிடைக்கின்றது.

நற்றிணையில்,

“பொங்கு திரை பொருத வார்மணல்
அடைகரைப் புன்கால் நாவல் பொதிப்புற
இருங்கனி கிளை செத்து மொய்த்ததும்பி..”

பெரும்பாணாற்றுப்படையில்,

“நாவலந்தண்பொழில் வீவின்றுவிளங்க
நில்லாவுலகத்து நிலைமை தூக்கி
பந்நிலை யணுகல் வேண்டி நின்னரை
பாசியன்ன சிதர்வை நீக்கி
பாவியன்ன வலிர்நூற்கலிங்க..”

மலைபடுகடாவில்,

“காபினுதிர்தன கருங்கனிநாவன்
மாறுகொள் வொழுகின்வூறு நீருயவை
நூறொரு குழீஇயின் கூவை சேறுரீந்த
துண்ணுநர்த் தடுத்தன தேமாப்புண்ணரின்
தாலையுக்கன் நெடுந்தளின்...”

இவை தவிர குட நாட்டினர் நாவற்பழங்களை ஆய்ந்து உண்ணும் பாடலொன்று புறநானூற்றில் காணப்படுகின்றது.

“கருங்கனி நாவல் இருந்து கொய்துண்ணும் பெரும் பெயராதி
பிணங்களிற் குடநாட்டெயினர்......”

மணிமேகலையிலும் உலக வறலிபுக்க கதையில் காயசண்டிகை நாவற்பழத்தினை முதிப்பதாக ஒரு செய்தி வருகிறது. நிற்க.

நாவல் வெப்பவலயப்பயிரினம்.இவை பயிரிட்டு வளர்க்கப்படுவது குறைவு. யாழ்ப்பாணத்தில் நாகர்கோயில், நாவற்காடு பகுதிகளில் நாவல் மரங்கள் அதிகம் காணப்படுகின்றது. நாவல் மரங்கள் மர அமைப்பில் வேறுபடுவது போன்று சுவையிலும் வேறுபடுகின்றது.

நாவல் மரம் மிர்த்தாசியோ குடும்பத்தை சார்ந்தது. இரு சொற்பெயரீட்டில் சிரிஜீயம் கியுமினி என அழைக்கப்படுகிறது..

# மே18

பா.கம்ஷனா

வரலாற்று சுவடுகளில்
கல் தோன்றா மண் தோன்றா
காலத்து மூத்த குடிகள்
நாம் அன்றோ

கண் திறந்த தேசத்தை காண அவாப்பட்ட
எம்மவர் கண்களை பிடுங்கியது
கயவர் கூட்டம்
வெலிக்கடைச் சிறையிலே
உயிர் மாண்டனர் எம்மவர்
1987வலி சுமந்த நம்மவர்களின் நிலை
யூலை கலவரமும் கறுப்பாகியது

சத்தியாக்கிரகத்தை உருவாக்கிய
அயல் நாட்டிற்கு சத்தியத்தை
முன்வைத்து உணவின்றி நீரின்றி
திலீபன் எனும் சுடரொளியும் மங்கியது

வேடிக்கை பார்த்தது
அயல் நாடும்
சர்வதேசமும்
அன்று முதல்
போரடாத் தொடங்கிய
தமிழினம் இன்று வரை
வலி சுமந்து போராடுகின்றது

எத்தனை சமாதான நாடகங்கள்
அரசியல் கபடங்கள்
நட்பின் துரோகம் என
வலையில் வீழ்ந்தும் போராடியது

பேராடி பெற்றது என்னவோ
வலி மட்டும் தான்
ஆம்
நந்திக்கடலன்னையினை
உதிரத்தால் முத்தமிட்டு
குற்றுயிரும் குல்லுயிருமாய்
எத்தனை எத்தனை உயிர்கள்
பரிதாபத்துடன்

குண்டுச் சத்தங்கள் பொழிய
கணவன் இறந்து கிடக்க
கண்ணீர் விட வழியற்று
பெற்ற மகனைக் காப்பாற்ற
கணவனை தாண்டி ஓடுகிறாள்

முட்கம்பி வேலியினுள்ளும்
குண்டு மழைகளிலும்
அங்கம் தனை பறிகொடுத்த
இரத்தக் கறையுடனும்
வலி நிவாரணம் பெற வழியுமின்றி ஓடுகிறான்

பெற்ற மழலை பசியால் துடிக்க
கண்களில் ரத்தம் சொட்ட
பங்கரை விட்டு வெளியே சென்ற தந்தை
குண்டுக்கு இரையாகினான்

மழலைகள் பலர் உணவின்றியும்
அங்கங்கள் இழந்து
தந்தை தாயை இழந்து
சகோதரனை இழந்து
தன் தேசத்தினுள் அநாதையாதக

சொல்லிலடங்கா விதவைகள்
எண்ணிலடங்கா அங்கவீனர்கள்

சயனைட் குப்பியுடன்எமக்காய்
காவல் காத்த எம் நாட்டு
சிறகுகள் விழுந்தன
பூக்கள் வாடின
பெண்கள் மீது பாலியலும்
சித்திரவதையும்
கற்பும் சூறையாடப்பட்டது




சாவினைத் தழுவியும்
காணமலாக்கப்பட்ட எம்மவர் நிலை
அறிய எத்தனை போராட்டம
எத்தனை உண்ணாவிரதம்

பெற்ற மகனை தேடி தந்தையும்
கணவனைத் தேடி மகழும்
பெற்றோரை தேடி மகனும்
தினம் தினம் வலி சுமந்து
கண்ணீருடன் நிலையறியாது
ஏக்கத்துடன் மாழ்கின்றனர்

ஈரைந்து ஆண்டுகள் கடந்தும்
ஊமையான சர்வதேசம்
செய்வதெல்லாம் சர்வநாசம்
சாகடிக்கும் கால அவகாசம்
வழங்கி மன்னிப்புச்பையாலும்
கைவிடப்பட்ட நாம்

பெற்றது என்னவோ வரமெனும்
வடிவிலான வலி சுமந்த சாபத்தை
மே 18 நந்திக் கடலன்னையும்
மௌனமாகி விட்டது ஏனோ?




## மறுபக்கம்

கோபி பிரகாஷ் திருக்குமரநாதன்

துமி மின்னிதழின் மறுபக்கம் என்ற இப்பகுதியினூடாக அறிந்தவைகளின் அறியாத பக்கங்கங்களை தேடும் வகையில் எழுத்தாளர் கோபி பிரகாஷ் திருக்குமரநாதனின் எழுத்துக்களில் புதிய பார்வை ஒவ்வொரு இதழிலும் விதைக்கப்பட உள்ளது.

# “அசுரன்” ஹிட்லர்





அசுரன் இந்த சொல் எமது சிறுபராயம் முதல் பழக்கப்பட்ட ஒன்றுதான். ஆனால் அந்த பதம் தீய சக்தியாகவும் அரக்கனாகவுமே எம் பிஞ்சு மனதுகளில் விதைக்கப்பட்டது. ஆனால் ஆனந்த நீலகண்டன் எழுதிய ராவணாயனமான “அசுரனும்“ சரி வெக்கையை தழுவி ஒடுக்கப்படும் சமூதாயத்தின் உரிமை குரலாக வெற்றிமாறன் படைத்த “அசுரனும்” சரி இன்று அந்த பதத்திற்கான அர்த்தத்தை மீண்டும் எம்மை சிந்திக்க வைக்கின்றது. ஒரு குழுமத்தின் தலைவன் இன்னொரு குழுமத்தின் வில்லனாக சித்தரிக்கப்படுவதை இதிகாசங்கள், திரைப்படங்கள் தொடங்கி நிஜ வாழ்க்கையில் கூட கண்டுகளித்துள்ளோம். ஆனால் இங்கு அதே குழுமத்தைச்சார்ந்தவனே அதற்கு வில்லன் ஆகியுள்ளான். நீ கூறுவதைப் பார்த்தால் ஹிட்லர் என்ன யூதனா? என்கின்ற உங்கள் கேள்வி கணைகளுடன் ஹிட்லரின் மறுபக்கத்துக்குள்ளே செல்வோம்.

ஹிட்லருடைய தந்தை அலாய்ஸ் ஹிட்லருடைய (Alois Schicklgruber தாய்வழிப்பெயர்) வளர்ப்பு தந்தை தான் Johan Georg Hitler. அலாய்ஸின் தாய் அலாய்ஸினுடைய பிறப்பின் பின்னரே ஜார்ஜை மணம் முடித்தார். அலாய்ஸின் தாய் ஆஸ்திரேலியாவில் யூத குடும்பமொன்றில் பணிப்பெண்ணாக வேலைப்பார்த்த சமயத்தில் கர்ப்பம் தரித்தமையினால் அந்த வேலையை விட்டும் ஏன் ஊரை விட்டும் வெளியேற வேண்டிய நிரப்பந்த்திற்கும் உள்ளாகினார். குழந்தைப் பிறந்த பின் திருமணம் முடித்தவர் இறுதி வரை அலாய்ஸின் தந்தை யார் என்பதில் மௌனம் காத்தார். அவரின் அந்த மௌனம் அது அந்த யூத குடும்பத்தை சார்ந்தவரோ என்ற யூகத்திற்கு வலுச் சேர்த்தது. இந்த சந்தேகம் ஹிட்லரைக்கூட பலசமயம் திடசங்கற்பத்திற்கு ஆளாக்கி உள்ளது. நான் அழிக்க நினைக்கும் யூத இனத்தவரா என் தந்தை என்று. அப்பா என்றால் அடிதான் என்று மனதில் ஆழப்பதியும் வகையில் நின்றால் அடி, நடந்தால் அடி, படுத்தால் அடி என்று ஹிட்லரே அஞ்சும் சர்வாதிகாரியாக தந்தை திகழ அவன் தாய் பின்னால் சென்று தன்னை பாதுகாத்துக் கொள்வான். அது சரி ஆண்பிள்ளை என்றால் அம்மா பிள்ளை தானே அதுதானே உலக நியதி. தன்னை அடிக்காத தனக்கென வாழ்கின்ற தாய் க்ளாராவையே தனது உலகமாக கொண்டு வாழ்ந்தான். ஆனால் அந்த கொடுங்கோலனுக்கு ஏன் மூன்றாவது மனைவியாக சம்மதித்தாள் என்று கவலைபடும் சிறுவனிடம் க்ளாரா எல்லாம் விதி என்று ஒரு வரியில் முடித்துவிடுவாள்.

இந்த விதி என்ற சொல் அன்று முதல் மரணப்படுக்கையில் விழும் வரை அவருடன் ஒட்டிக் கொண்டுவிட்டது. ஒட்டுமொத்த ஐரோப்பாவும் ஹிட்லரின் படையணிக்கு பணிந்த போதும் சரி, சோவியத் ஆக்கிரமிப்பின் போது ஜேர்மனி விழுந்த போதும் சரி அவர் சொன்னது அந்த ஒற்றை விதிதான். ஆம், அது அவர்களுடைய விதி இது எம்முடைய விதி. இந்த விதி இருபதாம் நூற்றாண்டுகளின் தொடக்கத்தில் ஜேர்மனியிலிருந்து பிழைப்புக்காக புகலிடம் தேடி வந்த ஆஸ்திரியர்களது வாழ்க்கையிலும் சரி, பூர்விக ஆஸ்திரியர்களது வாழ்க்கையிலும் சரி தனது கோரதாண்டவத்தை தொடங்கியது. ஆஸ்திரியாவைப் பொறுத்தவரைக்கும் அது ஒரு கதம்பதேசமே ஆகம். வந்தாரை வாழ வைக்கும் பூமியாக யாரும் வரலாம் போகலாம் என்ற நிலை காணப்பட்டது. அந்த சமயம் தன் தாயரை இழந்த பிற்பாடு இனி இழப்பதற்கு எதுவுமில்லை என்று பிழைப்புக்காக ஆஸ்திரியா வந்த ஹிட்லருடைய பார்வை யூதர்களின் பக்கம் திரும்பியது. ஆம், அன்று இஸ்ரேல் உருவாகியிருக்கவில்லை. யூதர்களுக்கென்று ஒரு தேசம் இருக்கவில்லை. ஆனால் அவர்கள் இல்லாத தேசமே இல்லையென்ற அளவுக்கு காற்று நுழையமுடியாத இடங்களில் கூட யூதர்கள் காணப்பட்டார்கள். காரணம் கல்வியிலும் பொருளாதாரத்திலிரும் அவர்கள் அடைந்த ஸ்திரத்தன்மை. இதைத்தான் வெற்றிமாறன் கூட ஒற்றை வரியில் “படிப்ப மட்டும் நம்ம கிட்ட இருந்து எடுத்துக்கமுடியாது சிதம்பரம்” என்று அழகாக கூறியிருப்பார்.

புத்தியை மூலதனமாக்கி உயர்வு நிலையை அடைந்த இந்த சிதம்பரங்கள் தான் ஹிட்லரின் ஆச்சரியக்குறி. காரணம் ஆஸ்திரியவாசிகள் அனைவரும் தொழிலாளிகளாக கடன் பஞ்சம் பட்டினியுடன் தம்மை வருத்திக்கொள்ள அவர்களுக்கு வட்டிக்கு கடன் கொடுத்து அவர்களை மேய்க்கும் முதலாளி வர்க்கமாக காணப்பட்ட அனைவருமே யூதர்கள் தான். தம்மைப்போன்று ஒரு ஏழை யூதனாவது கிடைக்கமாட்டானா என்று ஏங்கிய ஹிட்லருக்கு கிடைத்த பதில் “என்ன புலம்புகிறாய் ஏழையாக இருப்பவன் யூதனாகவே இருக்கமாட்டான்”. கலைகளின் தாயகத்தின் மண்ணின் மைந்தர்கள் தம் பாரம்பரியத்தை மறத்து உணர்வுகளை துறந்தது மண் சோறாவது கிடைக்காதா என்று பட்டினியில் புரண்டு யூதர்களின் காலடியை நாட அதிகார வர்க்கங்கள் அனைத்தும் யூதர்களுடைய காலடியில் விழுந்து அவர்களது கஜானாவை நிரப்பிக்கொண்டிருந்தது ஹிட்லரை அசுரனாக அவதரிக்கச் செய்தது. சிதறிக்கிடந்த ஜேர்மானியர்களுக்காக, அடிமைப்படுத்தப்பட்ட தொழிலாளர் வர்க்கத்திற்காக கிளர்ந்தெழுந்தவனுக்கு அனைத்து ஜேர்மானியர்களையும் ஒன்றினைத்து பிஸ்மார்க்கின் அகண்ட ஜேர்மனியா கனவினை நனவாக்க வேண்டும் நாம் மீண்டும் ஆளவேண்டும் என்றும் எண்ணங்கள் உதித்தன. ஆனால் இதற்கு ஒரேயொரு முட்டுக்கட்டை யூதர்களே அவர்களை ஒழித்துவிட்டால் மக்கள் இத்தகைய இன்னல்களை அனுபவிக்க தேவையில்லை என்ற யூத எதிர்ப்புக்கொள்கை அவனது ஆழ்மனதில் காட்டுத்தீ போல் பற்றிக்கொண்டது. அவர்களை நான் ஆளவேண்டும் என்ற வேட்கையும் துளிர்விட்டது.

இந்த ஆளவந்தானை முதலாம் உலகப்போரில் துளைத்த ரவைகள் இன்னும் சற்று காயப்படுத்தியிருந்தால் இரண்டாம் உலகப் போரின் மிகப்பெரிய தாதாவை அன்றே இழந்திருப்போம். ஆம், இரண்டாம் உலகப் போரின் காய்களை நகர்த்திய ஹிட்லர் முதலாம் உலகப்போரில் ஒரு சாதாரண இராணுவச் சிப்பாய்தான். ஐந்து மாத ஓய்வு வழங்கப்படும் அளவிற்கு நூலிழையில் அன்று தப்பினார். ஒரு கட்டத்தில் விஷவாயு தாக்குதலில் அகப்பட்டு தற்காலிகமாக பார்வையை இழந்தது மட்டுமல்லாமல் அந்த சம்பவத்தோடு “ஹிஸ்டிரியா” என்ற நரம்பு சார்ந்த நோயும் அவரைப் பற்றிக் கொண்டுவிட்டது இன்று யாரேனும் அதிகமாக சத்தம் போட்டு கோபப்பட்டால் நாம் இவனுக்கு ஹிஸ்டிரியா என்று கூறுவோமல்லவா அதே நோய்தான். குண்டு சத்தத்தை சங்கீதமாக கேட்டுக்கொண்டும் Bulletகளை மெடல்களாக வேண்டிக்கொண்டும் இருந்த பாஷாவிற்குள் ஒரு மாணிக்கமும் ஒளிந்திருந்தது. ஆம், சிறுவயதிலிருந்தே ஓவியக்கலையில் அதீத ஈடுபாடு உண்டு அவர் வேலை தேடி வந்தது கூட ஓவியத்துறையில் தான். அனைத்து சிப்பாய்களும் குடும்பங்களுக்கு கடிதம் எழுதி ஆறுதல் தேடியபோது இராணுவ முகாமில் ஓவியங்களை வரைந்துக் கொண்டிருந்தார். ஓவியங்களில் கூட தன்னுள் புதைந்திருந்த புரட்சித்தீயை விட்டு வைக்கவில்லை. அவரது ஓவியங்களே இவ்வாறு என்றால் பேச்சைப்பற்றிச் சொல்லவே தேவையில்லை. அவர் பேச ஆரம்பித்து விட்டால் அவரது பேச்சில் மயங்காதவர் எவருமே இருக்க மாட்டர்கள். அத்தகைய உணர்ச்சி, அத்தகைய கம்பீரம் அவரது தொனியில் காணப்படும். குழம்பிய குட்டைகளில் தான் மீன் பிடிக்க இலகு என்று பீராங்கிகளுக்கு ஓய்வு விடுத்து தன்னுடைய பேச்சு பீராங்கியினால் அரசியல் பண்டிதர்களையே குழப்பிவிடும் வல்லமை படைத்தவன் இந்த அசுரன்.

இன்று கூட ஜேர்மனியாவில் இருந்து வருகின்ற இயந்திரங்களுக்கு கிராக்கி இருக்கின்றது என்றால் அதற்கு வித்திட்டதும் இந்த அசுரனே. ஆம், யூதர்களை எங்கணம் வெறுத்தாரோ அங்கணம் பொறியியலாளர்கள் மீது அளவு கடந்த அன்பை வைத்திருந்தார். பொறியியல் துறையை ஸ்திரப்படுத்தும் நோக்கில் உறுதி கொண்டிருந்த அவர் அதில் வெற்றியும் கண்டார். பின்னாளில் யுத்த காலத்தில் இது அவருக்கு உடனுக்குடன் தரமான மோட்டார் வாகனம் தொடங்கி நீர்மூழ்கிக்கப்பல் தயாரிக்க ஊன்று கோலிட்டது. தளபதியில் வரும் ரஜினியும் மம்மூட்டியினது நட்பைப் போன்றது ஹிட்லரதும் முசோலியினதும். ஆபிரிக்கா என்னது ஐரோப்பா உன்னது என்று முஸ்தபா முஸ்தபா பாடிய வண்ணம் இருவரும் எதிரிகளைப் பந்தாடிய காலம் அது. முசோலினி தவறுகளை இழைத்த வேளையில் கூட ஹிட்லர் தோழனாக தோள் கொடுத்த சந்தர்பங்கள் பல. யூதர்களை கொன்றொழித்த ஹிட்லர் ஒரு தடவையேனும் அது குறித்து வருத்தம் கொண்டதில்லை. அதற்கு அவர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பு மட்டும் காரணமில்லை Borderline Personality Disorder எனப்படும் ஒரு மன நோயும் அவரை தொற்றியிருந்தது. இது பின்னாளிலேயே அவரது மருத்துவ அறிக்கைகள் மற்றும் குறிப்புகள் மூலம் வெளிச்சத்திற்கு வந்தது. ஒடுக்குமுறைக்கு எதிராய் அசுரனாய் எழுந்தவன் ஆறு மில்லியன் யூத உயிர்களை பறித்த அரக்கன் ஆனது கூட ஹிட்லருடைய தாயார் கூறுவதைப் போன்று விதியின் விளையாட்டுத்தான்.

# கண் அம்மா....

தொண்டரடிப்பொடியன்

கண் விழிக்க முயற்சிக்கிறேன்
கண் விழிக்க முயற்சிக்கிறேன்
முடியவில்லை முடியவேயில்லை
முடிந்துவிட்டதா என் பார்வையின் வீச்சு
இடிந்து விட்டேன் ஒருகணம்

ஓவியன் இல்லை
கவிஞன் இல்லை
கலைஞனும் இல்லை நான்.
கண் எதற்கு உனக்கென்று
நீங்கள் கேட்பது கேக்கிறது.
ஓவியன் வரையவும்
கவிஞன் புனையவும்
நான் வேண்டும் நான் வேண்டும்.
ஆம் நான் ரசிகன்.
கலைஞனுக்கு ரசிகன் வேண்டும்.
அதைவிட முக்கியம்
அந்த ரசிகனுக்கு கண் வேண்டும்.

அறியாத ஒன்றை
அறிந்த பின்
அறிந்ததை மற என்றால்?

உணராத ஒன்றை
உணர்ந்த பின்
உணர்ச்சியற்று இரு என்றால்?

காதம்மா
மூக்கம்மா
நாக்கம்மா
கேட்டதுண்டா நீங்கள்?
கண் அம்மா.....
கண்ணம்மா....
கேட்காதவர் உண்டா?

அறிந்து கொள் மானுடமே..

அம்மா அந்தஸ்து கொடுக்கப்பட்ட
ஒரே அங்கம் கண்.
அதை கொடுத்த ஒரே மொழி தமிழ்.

இதயம் துடிப்பது தினச்செய்தி
கண் துடிப்பது திடுக்கிடும் செய்தி

சொல்லிக்களைத்த இன்பத்தையும்
சொல்லாத துன்பத்தையும்
குறைக்கும் வழி
கண் நீர் வழி

எந்த மொழிக் குழந்தைக்கும்
முதல் மொழி கண் நீர்..
நாளங்கள் வளரும் வரை
வடியாத கண் நீர் அது..
பசிக்கும் தாகத்துக்கும்
அன்புக்கும் அரவணைப்புக்கும்
குழந்தையின் ஆயுதம் கண் நீர்
வாயுள்ள தொப்புள் கொடி அது..
வளராத குழந்தைக்கும்
வளர்ந்த குழந்தைக்கும்
வார்த்தையால் முடியாததை
கண் நீர் முடித்து வைக்கும்.

கழிவகற்றல் தொகுதிகளில்
கண் வெளிப்படையானது
கழிவகற்றல் தொகுதிகளை
அடக்குதல் ஆபத்து..
அடக்க அடக்க அழுத்தம் கூடும்..
அடக்காமல் அழுதேன்
அளவு கூடி விட்டதோ?
அதனால் அழுகி விட்டதோ?
உப்பும் சேர்த்ததால்
துரு ஏறி விட்டதோ?

உரு ஏறி விட்டது எனக்கு
கண்ணில்லா உடம்புக்கு வாழ்வு பாழ்

மகாபாரதம் கொண்டாட மறந்த பெண்
காந்தாரி....
தன்னவனுக்காய் கண் மறைத்தவள்...
தனயனுக்காயே கண் திறந்தாள்...
பாஞ்சாலியிலும் பத்தினித்தெய்வம் காந்தாரி
வியாசருக்கும் சரி
விநாயகருக்கும் சரி
விழி பிழைத்தால்
விளையும் விபரீதம் விளங்கவில்லை.

கண்ணைத் தடவிப்பார்க்கிறேன்.
கைகளால்த்தான் இனி பார்வை...
பழமொழியை மாற்றுங்கள்
கண் இல்லா உடம்புக்கு கை கண்




இதுவரை என்னோடு இருந்ததை
ரசிக்கத்தவறிவிட்டேனே?
கண் கொண்டு ரசித்தேன்
கண்ணை ரசித்தேனா?
இல்லாமையில்த்தான் ஒன்றின் அருமை
புரிகிறது...
கண்ணே என்னிடம் வந்துவிடு
கண்ணிலனின் சாபம் தீர்த்துவிடு

ஆயிரம் கண்ணுடையாள் உடனுறை
முக்கண்ணனே..
என் கண்களைத்திருப்பித்தா...
இமைக்கு சந்தர்ப்பம் அளியேன். இமைக்காமல்
கண்ணை நானே காப்பேன்...

சற்றுப்பொறுங்கள்...
கேட்டதும் கொடுத்துவிட்டானா இறைவன்?
வெட்டும் மின்னல் ஒளி
என் விழிக்கு தெரிகிறதே..
மின்னல் தெரிகிறது என்றால்
என் கண்கள் காலாவதியாகவில்லை...
அடடா..
சீதையை மீட்ட இராகவனாய்
சிரித்துக்கொள்கின்றேன்..
மின்னலே...
மழையைத்தானே அறிவிப்பாய்?
பார்வையையுமா அறிவிப்பாய்?
பார்வையை பறிப்பவன் தானே நீ?
பார்வையை கொடுத்திருக்கிறாயே இன்று..

மேகக்காதலின் சங்கீதமே
உனக்கு என் நன்றி..

மின்சாரம் இல்லை..
சம்சாரம் இல்லாத சம்சாரி போல்,
இருட்டிவிட்டது என் உலகம்.
விளக்கைத்தேடுகிறேன்..
அதிகம் தேடப்படாதது
அகப்படுவது கடினம்..
அகப்பட்ட மெழுகுதிரியை
அவசரமாய் பற்ற வைக்கிறேன்..
வெட்கப்பட்ட காற்று
வேகமாய் விளக்கை அணைக்கிறது..
விட்டுவிடவில்லை நான்..
விடாமல் விளக்கை ஏற்றுகிறேன்..
விக்கிரமாதித்தனின் விசிறியல்லவா!
ஏற ஏற சறுக்கி விடும்
வாழை மரம் போல
ஏற்ற ஏற்ற அணைகிறது விளக்கு..
அமாவாசை நாளில்
அபசகுணம் பார்க்கக்கூடாதாம்..
அனுதினமும் பார்க்காதவன் நான்..
முயற்சிக்கு முட்டுக்கட்டை போட
முடியப்போகிறது தீக்குச்சி!

கண் மூடித்தனமாய் பற்ற வைத்த
தீக்குச்சிகள் தீக்கிரையாகிக் கிடக்க,
பிரம்மாஸ்திரமாய் இறுதி தீக்குச்சி..


மின்சாரம் திரும்பும் வரை
விழி பார்க்க வேண்டுமெனின்,
விளக்கெரிய வேண்டும். - அதற்கிந்த கடைசித்
தீக்குச்சி
கவனமாய் பற்ற வைக்கப்பட வேண்டும்!
கவிதையின் வாசகர்களே.. - இந்த
பயந்தாங்கொள்ளிப்
பைத்தியக்காரனுக்காக
பிரார்த்தித்துக்கொள்ளுங்கள்...
பற்ற வைக்கிறேன்...
என் இறுதி நம்பிக்கையை...
ஆஹா...
தீக்குச்சி தீப்பந்தமாய் எரிகிறது!
சந்தோசப்பெருமூச்சு...
அவ்வளவும் தான்..
தீப்பந்தம் மீள தீக்குச்சியாகி
தீர்ந்தே போனது!
என் மூச்சு எனக்கே எமனானது!
பதறி விட்டேன் ஒரு கணம்!
மறுகணம்...
......
......
மின்சாரம் வந்து விட்டது!

# சித்திராங்கதா

காவியமோகன்

தொடர் 1

திவாகரன்



'யாழ்ப்பாணத்தை பூகோள படத்திலே நோக்கும் போது அது கடுகுப் பிரமாணமாய் தோன்றினாலும் அதன் சரித்திரத்தை நோக்கும் போது, பெரிய தேசங்களின் சரித்திரத்தோடு வைத்து நோக்கத்தக்க பெருமையுள்ளதாகின்றது' என 1912ஆம் ஆண்டில் வெளிவந்த தனது "யாழ்ப்பாண சரித்திரம்" என்ற நூல் முகவுரையில் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார். யாழ்ப்பாணப் பழம் பெருமை பற்றிய எதிர்பார்ப்புக்கள் ஈழத்தவரிடம் காலம் முழுதும் தேடலை உண்டாக்கியே வந்திருக்கின்றன. ஈழத்து வரலாறே சிங்கள மக்களின் வரலாறு என எண்ணப்பட்ட காலத்தில் இத்தகைய தேடல்களே தமிழரின் தனித்துவத்தைக் கோடிட்டுக் காட்டிய அதே நேரத்தில் இது பற்றிய அறிய வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தின. இதன் அவசியத்தையும் ஆனந்தத்தையும் ஆதாரமாக்கி பெருவரலாற்றின் சிறுபுள்ளி ஒன்றை நயம்பட எடுத்துரைக்க சிறுமுயற்சி கொள்கிறோம். காரியம் பெரிது. எம் திறமை சிறிது. இருந்தாலும் முயற்சியில் மட்டும் நம்பிக்கை கொண்டு முன்னேறுகிறோம். நான்கு நூற்றாண்டுகள் முன்னோக்கிய நாகதீபத்திற்கு நாம் உங்களை அழைத்துச் செல்ல ஆசை கொள்கிறோம்.

காலவெள்ளத்தின் பின்னோக்கிய பயணத்தில் கி.பி 1618ஆம் ஆண்டிலே ஒரு சித்திரை மாத நள்ளிரவு பொழுதிற்கு நாம் இப்போது வந்தடைந்திருக்கிறோம். இலங்கை இந்திய வங்காள விரிகுடாவின் இடையில் மரக்கலங்கள் சில பயணமாவது போல் தெரிகின்றன. வானும் கடலும் கலந்து நிறபேதமின்றி காட்சி தரும் காரிருளினை இடையிடையே சில மின்னல் கீற்றுக்கள் வெட்டிச்செல்கின்றன. மின்னல் கீற்றொன்றின் கணநேர வெளிச்சத்தில் அம்மரக்கலங்கள் இலங்காபுரி நோக்கி விரைந்து கொண்டிருப்பதை அறிந்து கொள்ளலாம்.

கொஞ்சம் நெருங்கிப் பார்த்தால் ஏராளம் படைவீரர்கள் மரக்கலங்களில் பயணித்துக் கொண்டிருப்பதாய் அறிய முடிகிறது. தோராயமாய் எண்ணினால் ஐயாயிரம் வீரர்கள் அம்மரக் கலங்களில் அடங்குவதாய் கொள்ளலாம். தீச்சுடர்களின் ஒளியில் மின்னுகின்ற மஞ்சள் நிறக் கொடி தாங்கிய கலமே அப்படையின் படைத்தளபதியினுடைய கலமாக இருக்கவேண்டும் என ஊகிக்க முடிகிறது. இத்தனை வேகத்தோடு இவர்கள் எதற்காக இலங்காபுரி நோக்கி விரைந்துகொண்டிருக்கிறார்கள்? பெரும்படையோடு அச்சிறுதீவு மீது போர்நோக்கம் கொண்டு புறப்பட்டார்களா? அல்லது நட்பு பாராட்டும் உதவிப்படையாக இலங்காபுரி நோக்கி விரைகின்றனரா? நாம்மால் இப்போதைக்கு எதையும் எண்ணிக் கொள்ள இயலாது. ஆனால் சிறிது நேரம் இவர்களுடன் பொறுமையாக பயணித்தால் எதையாவது அறிந்துகொள்ள முடியும் என நம்பலாம்.

கொந்தளிப்பும் குதூகலமும் கலந்த ஒருவகை அமைதி நிலையில் தெரிகின்ற படைத்தளபதியின் முகத்தினை மாறி மாறி பளிச்சிடும் மின்னல் வெட்டுக்களின் உதவி கொண்டு நாம் ஓரளவு பார்க்க முடிகிறது. அவன் முகத்தில் தெரிகின்ற அந்தப் பெரிய மீசையும் அதற்குள் மறைந்துள்ள பேரமைதியும் பெரும்புயலிற்கு முன்னாலுள்ள ஒரு அமைதியை ஏனோ நினைவுபடுத்துகிறது. உண்மையிலேயே ஒரு பெரும்புயலை எதிர்நோக்கியே அவன் பயணம் அமைந்திருப்பதாய் அவன் நம்புகிறான். அந்த நம்பிக்கையினாலே குழப்பம் நிறைந்த அமைதியுடன் இவ்விரவுப் பொழுதில் எது குறித்தோ சிந்தனையில் அவன் தன் மீசையை வருடிக்கொண்டிருந்தான்.
இலங்காபுரியில் அவன் நிகழ்த்த துடிக்கும் வீர தீர சாகச வேட்கையை உள்ளூற நினைந்து இடையிடையே தன் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு வானின் குளிர்மதியை நோக்கி ஆணவமாய் சிரித்துக் கொள்கிறான். ஆழ்ந்த சிந்தனையில் ஊறிய படியே அவன் சிறிது நேரத்திற்குள்ளே உறங்கிவிடுகிறான். படை வீரர்களின் கூச்சல் ஒலி கேட்டு அவன் விழித்துப் பார்க்கையில் பொழுது புலரும் வேளையை நெருங்கியிருந்தது. காரிருள் மெள்ள மெள்ள அகன்று கொண்டிருந்தது. பொற்கதிர்கள் வான் முழுதும் பரவத்தொடங்கின. ஆழ்கடல் அலைகளின் பயணிகளிற்கு கதிரவன் தன் பிரத்தியேக தரிசனத்தை காட்ட தொடங்கினான். படைவீரர்கள்அனைவரும் வானையே வாஞ்சையோடு நோக்கி சத்தமிட்டுக் கூவிக் கொண்டிருந்தனர்.

பொழுது புலரப்புலர கடலும் வானும் பலப்பல வர்ணஜாலங்களை மாறிமாறி அவர்களிற்குக் காட்டி மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டிருந்தன. படைத் தளபதியின் கண்கள் கொள்ளாத அளவிற்கு மகிழ்ச்சியிலும் ஆர்ப்பரிப்பிலும் அந்தக்காட்சிகளை பருகிக் கொண்டிருந்தன. வீரர்களில் ஒருவன் திடீரென்று 'அந்தோ இலங்கா தீவு' என குறிப்பிட்ட ஒரு திசையினை காட்டியபடி உரத்துக் கூவினான். அவன் கைகாட்டும் திசையினை நோக்கி எல்லா வீரர்களின் பார்வையும் திரும்பியது. வானையும் கடலையும் மட்டும் அதிக நேரமாய் கண்டு களைத்துப் போன வீரர்கள் இப்போது எங்கோ ஒரு தரையைக் கண்டதால் பொங்கிவரும் மகிழ்வால் பெருங்கூச்சல் இடுகின்றனர்.

படைத்தளபதி ஆவல்மிகுதியுடன் சென்று கலபதியை விசாரித்தான். 'காணுகின்ற கரையானது இலங்காதீவின் காங்கேசந் துறைமுகமாகும். தளபதி, இவ்வாறே பயணித்தால் நாம் நண்பகல் கடந்ததும் ஊராத்துறையை அடைந்துவிடலாம்.' என கலபதி கூறியதைக் கேட்டதும் மரக்கலங்களை முந்திக் கொண்டு மணிபல்லவத்தில் கால்பதிக்க பேராவல் கொண்டான் படைத்தளபதி. கரைகண்டதும் படைவீரர்களினதும் தளபதியினதும் ஆவல் பன்மடங்கானது. 'எழில் கொஞ்சும் இலங்கா புரியை நாம் நெருங்கிவிட்டோம். இனி எங்கள் வீர வரலாறு இலங்காமணித்தீவு முழுதும் எதிரொலிக்கட்டும்' என படைத்தளபதி ஆக்ரோஷமாய் கூற படைவீரர்கள் அனைவரும் அதை ஆமோதித்து கோஷமிட்டனர். அந்தக் கோஷ ஒலி அலைகடலின் பேரிரைச்சலை தாண்டி இந்து சமுத்திரத்திலிருந்து இலங்கா தீவின் கரைகளை ஆவேசமாய் போய் சென்றடைந்தன.

இலங்காதீவை நெருங்க நெருங்க சமுத்திரத்தில் சில பெரிய கப்பல்களின் சஞ்சாரத்தை தளபதி அவதானித்தான். அவை குறித்து கலபதியிடம் வினவிய போது 'அவை ஈழநாட்டிலிருந்து அராபிய நாடுகள் நோக்கி பயணமாகும் வர்த்தக கப்பல்களாகும் . இது முத்துக்குளிக்கும் காலமாகையால் அவற்றுள் விலையுயர்ந்த மாணிக்கங்களும் முத்துக்களுமே நிறைந்திருக்கும் என நினைக்கிறேன். இலங்காபுரியின் பெறுமதியான முத்துக்களிற்கு வடக்கிந்திய மற்றும் அரேபிய நாடுகளில் பெருங்கேள்வி நிலவுகின்றது தளபதியாரே' என விழிகளை உயர்த்தி பதிலுரைத்தான் கலபதி. 'ஆகா! கப்பல் நிறைய முத்துக்களா? இந்தச் சிறிய தீவினுள் எத்தனை அற்புதங்களை இறைவன் புதைத்து வைத்திருக்கிறான். இதனை இந்து மகாசமுத்திரத்தின் முத்து என எல்லோரும் அழைப்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பார்த்தீரா கலபதி' என கண்கள் மலரும் ஆச்சரியத்துடன் கண்ணிற்கு தெரிந்த கரையை நோக்கிய படியே கேட்டான் தளபதி. 'ஆம் தளபதி. இச்சிறு தீவின் ஆச்சரியங்கள் ஏராளம். நான் சிறுவனாய் இருந்த போது என் தந்தையுடன் ஒருமுறை இங்கு வந்திருந்தேன். அந்நேரம் ஊராத்துறையிலே அளவில் பெரிய இராஜ கப்பல்கள் நிற்பதைக் கண்டேன். அந்தக்கப்பல் எவ்வளவு பெரிது என்று சொல்லவேண்டுமானால் உள்ளே முப்பதிற்கும் அதிகமான யானைகளை கொள்ள முடிந்திருந்தது. விஜயநகர அரசிற்கு யானைகளை பெற்றுத்தரும் நெல்லூர்ப் பட்டினத்திலிருந்த அவசி திப்பையச் செட்டியாரே அந்த யானைகளை வாங்கி கொண்டு தெலுங்குதேசம் நோக்கி புறப்பட்டார். அதிலிருந்து நான் எப்போது இவ்விடம் வந்தாலும் அந்த யானைக்கப்பலின் காட்சியே என் ஞாபகத்தில் வந்து ஒவ்வொரு முறையும் என்னை ஆச்சரியப்படுத்துகிறது' என கலபதி முகத்தில் பெருவியப்போடு கூறியதை ஆர்வமாய் கேட்டுக் கொண்டிருந்தான் தளபதி.

'ஆம் கலபதி ,விஜய நகர அரசிடம் அக்காலத்தில் எண்ணாயிரம் யானைகள் இருந்ததாக நானும் கேள்வியுற்றிருந்தேன். அவர்கள் இலங்கையில் இருந்தும் யானைகளை தருவித்திருக்கிறார்கள் என்று இப்போதுதான் நினைக்கிறேன். இந்தச்சிறுதீவு தான் எத்தனை வளத்தோடு இருக்கிறது' என தளபதி ஆச்சரியத்துடன் கூறிக் கொண்டிருக்கும் போது சமுத்திரத்தில் வேறு சிறு கப்பல்களும் அதிலிருந்து சிலர் நாவாய்கள் மூலம் இறங்கி சமுத்திரத்தில் பயணிப்பதையும் அவதானித்தான்.

காட்சிக்காக காத்திருப்போம்....



# சட்டத்தின் சாரல்

## சட்டத்தின் தோற்றுவாய்

அ.திருமருகன்
மாணவன்,
இலங்கை சட்டக்கல்லூரி.

சட்டம் தன் கடமையை செய்யும் என்று நிறைய பேர் சொல்லி கேள்விப்பட்டிருப்போம். அப்படி என்ன அந்த சட்டம்? அது எங்கே உருவானது? அப்படி என்ன அந்த சட்டத்தின் கடமை? இப்படி பல நூறு கேள்விகள்.

இதற்கு விடை காணும் ஒரு சிறிய முயற்சியை நோக்கி இப் பூமியின் வெற்றி உயிரினம் என்று தன்னை பறைசாற்றும் மனிதனின் முயற்சி. இது ஒரு சிறிய தேடல்........!!!!!!!

இதற்காக இந்த நவநாகரிக மனிதன் சில ஆயிரம் வருடங்கள் முன்நோக்கி ஓடி செல்ல தன் சிந்தனை சிறகை விரட்டிப் பறக்கிறான்! அவன் ஆறு அறிவு தந்து தன்னை படைத்து வாழவைக்கும் இயற்கையின் அன்னையின் புத்திசாலி மனிதன் அல்லவா!

சிந்தனைச் சிறகுகள் அகன்று விரிந்து ஓரிடம் நிற்கிறது. அந்த இடம் வரலாறு துல்லியமாக தன்னை நிலை நிறுத்திக் கொள்ளாத காலம். சென்றவன் திகைத்து நிக்கிறான் அது கால சக்கரத்தின் படு பாதாள பகுதி. ஆறுகள், மலைகள், காடுகள், மேடுகள் மற்றும் பள்ளங்கள் என மனிதனை பயமுறுத்தியது அந்த காலத்து பூமி.

மலைகளின் குளிர் காற்றில் நடுங்கிய படி கீழிறங்கி ஓடிக்கொண்டிருக்கின்றன மனித நாகரிகங்களை பிறப்பித்த ஆதார நதிகள்!

என்ன இறுமாப்பு அந்த நதிகளுக்கு? மலைகளில் நடை பயின்று கீழிறங்கி மனித நாகரிகங்களிற்கு உயிர் தந்து செல்வங்களை அள்ளிக் கொடுத்து விட்டு அமைதியாக நெடுந்தூரமாய் போய் கொண்டே இருக்கின்றன....!! அது அந்த நதிகளின் வெற்றி பயணம் அல்லவா.

அந்த காலத்து மனிதர்கள் உண்ண தெரியாது, உறங்க தெரியாது, உடை கூட தெரியாது, அட பாவம் எதுவும் தெரியாத நிர்வாண மக்கள் அவர்கள்.

மாலை மங்கி இருள் சூழ்ந்தவுடன் ஓடி ஒழிவார்கள், அடுத்த நாள் காலை சூரியன் வந்து ஒளி காட்டினால் தான் வெளியில் வருவார்கள்.

அன்றைய மனிதனுக்கு பூமியே விடை காணாத புதிராக தெரிந்தது. அனைத்தையும் கண்டு பயந்த மனிதர்கள் மத்தியிலும் சிலர் மரங்கள், காடுகள், மலைகள், நதிகள், வானம், கடல் என்ன செய்யும் என்று தைரியதுடன் பார்த்தார்கள். அந்த மனித கூட்டத்தின் சிற்பிகள் இவர்கள்.

இயற்கை அன்னையின் ஆச்சரியம் என்ன தெரியுமா அவ் இயற்கையை தைரியத்துடன் எதிர் கொண்ட அந்த ஆன்ம பலம் அம்மனிதர்களுக்கு தமக்குள் புதைந்திருந்த மனித இனத்திற்கே உரித்தான அச்சிந்தனை ஆற்றல் வெளிப்பட தொடங்கியது.

சிந்தனைகளின் விளைவு கண்டுபிடிக்கப்பட்டன பல. ஒன்று அதிலே இயற்கை தான் கடவுள் எனும் அன்றைய மதத்தின் அத்திவாரம். ஏன் அத்தனையிலும் இறைவனைக் கண்டவனாக மாற்றம் பெற்றான் அம்மனிதன்.

பூமியின் அவிழா புதிர்களை அவிழ்க்க தன் சிந்தனைத் திறனை அதிகரித்தவன் கண்ட சிந்தனைகளாலும் செய்த செயல்களாலும் நாகரிகம் மெல்ல மெல்ல அரும்ப தொடங்கியது. இந்த உலகமே நமது என்று ஆகிப்போனது அந்த ஆதி மனிதனுக்கு.!!!

"நாகரிகங்கள் பிறப்பதில்லை அவை இந்த மனித இனத்தின் தொடர்ச்சி......" என்ற வார்த்தைகளுக்கு சான்று பகிரும் வண்ணம் தொன்று தொட்டு தொடர்கிறது நாகரீகம்.

இப்படி மனிதன் வேடர்களாக அலைந்து திரிந்த காலத்தில் இருந்து படிப்படியான ஒழுங்குபடுத்தப்பட்ட எண்ணக்கருக்கள் அவனுக்குள் விதைக்கப்பட அவன் வாழ்ந்த மற்றும் வாழ்கின்ற காலத்தின் நிலையை அக் காலத்தின் கண்ணாடியாக பிரதிபலிக்கும் ஒருவகையான அறம் சார்ந்த நடத்தைகள், சிந்தனை கோட்பாட்டுகள் மற்றும் வழக்காறுகள் ஒரு அவனை சுற்றி ஒரு வரம்பு முறை முளைத்தது.

இந்த ஆதி மனிதன் கண்டுபிடித்த மதம் எனும் வாழ்வியல் நெறி கூட அவனின் வாழ்க்கையை கட்டிற்குள் வைத்து கொண்டு வழிநடத்தியது என்றால் அது மிகையல்ல. அன்று இறைவன் என்ற கோட்பாடு தருமமாக ஏன் சட்டமாக கூட மலர்ந்தன. அவை இன்று வரை நீடித்து நிலைத்தும் இறுக்கமாக இன்று இவ்உலகில் உள்ளன.

இப்படியான ஆதி மனித வாழ்க்கை முறையில் இந்த விடயங்கள் சரியானவை அல்லது ஏற்றுக் கொள்ள கூடியவை அல்லது விரும்பக்கூடியவை என்றும் இவை பிழையானவை அல்லது விரும்பத்தகாதவை அல்லது ஏற்க முடியாதவை என்றும் தொடங்கியது. பின்நாட்களில் அவை எல்லாம் ஒரு வரைமுறை கண்டு இவை அங்கரிக்கப்பட்டவை, இவை அங்கீகரிக்கப்படாதவை என்றும் அந்த வரைமுறை பலமானது.
இந்த ஏற்பாடுகள் வளர்ந்து இதுவே பிற்காலத்தில் சட்டமாகவும் அது மீறப்படும் போது தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்ற பிரிதொரு கோட்பாடும் நடைமுறைக்கு வந்தது.

ஆக இன்றைய மனிதனின் நினைவுகளின் பிறப்பிற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே மனிதன் தர்மம் அல்லது அறம் அல்லது ஏற்க்கப்பட்டவை எனும் சட்டத்தால் கண்காணிப்பு செய்யப்பட்டவனாக காணப்படுகிறான்.

காலம் செல்ல செல்ல அத்துணை செயலிலும் அதீத வளர்ச்சி கண்ட அந்த மனித சமூகத்தை நெறிப்படுத்துவதன் பொருட்டு அதற்கான விதிமுறைகளைக் கொண்டமைந்தாக உருவெடுத்தது "சட்டம்".

பின்னர் அந்த விதிமுறைகளை மனிதர்கள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கவும் அதனை அமுலாக்கம் செய்யவும் சட்ட மீறல்களுக்கு தண்டனை வழங்குவதற்கும் அதிகாரம் கொண்டவையாக தோற்றம் பெற்றன சட்ட விதிகள். மனித நாகரிக வளர்ச்சியின் காரணமாக அப்படியே சட்டமும் மனித வாழ்வியலுடன் பின்னி பிணைந்தது.

அன்றைய மனிதன் கண்ட சட்டம் இன்று மிகப் பெரிய மாற்றங்கள் கண்டுள்ளது. அன்று தேவைகள் குறைந்த ஒரு சமுதாயம் வடிவமைத்த சட்டங்கள் காலப் போக்கில் இயல்பான மாற்றங்கள் பெற்றன சில பகுதிகளில் சில சட்டங்கள் இன்றைய கால மாற்றத்தில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள பகீரதப் பிரயத்தனங்களை செய்தவையாக கூட இருக்கின்றன. என்ன செய்ய மாற்றம் ஒன்றே மாறாதது என்னும் கோட்பாட்டிற்கு சட்டங்களும் விதிவிலக்கு இல்லையே!!

சட்டத்தின் தேடலில் மிகவும் குழப்பமான ஒரு விடயம் உள்ளது என்றால் இந்த சட்டமும் அறமும். சட்டமும் அறமும் என்று நோக்கின் அறம் என்பது மனிதவாழ்வின் விழுமியங்களை உருவாக்குவதற்கான அதனை கற்பிக்கும் ஒரு கருத்தியலாகும். அதன் மற்றொரு வடிவமே சட்டம் என்று கூறப்படுகிறது. திருட்டு தவறான நடத்தை என்று அறம் போதிக்கிறது. திருடினால் தண்டனை உள்ளது என்று சட்டம் எச்சரிக்கிறது. உயிர்களைக் கொல்லுதல் பாவம் என்று அறம் கருணையோடு வழிநடத்துகிறது. கொலை செய்தல் தண்டிக்கத்தக்கது என்று சட்டம் மிரட்டுகிறது.

ஒரு நாணயத்தின் இரு பக்கங்களே சட்டமும் அறமும் என்று கருதுவதற்கு இக்கருத்தியலே அடிப்படையாகும்.

"தொட்டில் முதல் சுடுகாடு வரை" என மனித வாழ்க்கையை வரையறை செய்கிறோம் அல்லவா? ஆனால் இன்று சட்டத்தின் ஆட்சி அதனுடைய பரப்பு அது கண்ட எல்லைகள் இந்த மனிதன் இப்பூமியில் பிறப்பதற்கு முன் தொடங்கி அவன் இறந்த பிறகும் தொடர்கிறது.

அது எப்படி ?

இன்று தாயின் கருவறைக்குள் இருக்கும் மனிதக் கருவின் உரிமைகளை கூட சட்டங்கள் அங்கீகரித்துள்ளன. மனிதன் இறந்த பிறகும் சொத்துக்கள் மற்றும் வாரிசுரிமை போன்ற சில சட்டங்கள் அவனை பின்தொடர்கின்றன. அது தான் சட்டம் இன்று மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்த கதை!

சட்டம் என்பது மனிதர்களுக்காகவே உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஒவ்வொரு நாட்டின் குடிமகன்களும் அந் நாட்டின் அனைத்துச் சட்டங்களைப் பற்றிய பொது அறிவை பெற்றிருக்க வேண்டியது இன்றியமையாதது.
நம்மில் எத்தனை பேருக்கு சட்டம் பற்றிய புரிதலும், அறிவும் இருக்கிறது? என்ற கேள்வி எங்களுக்கான ஒரு நாட்டின் குடிமக்கள் என்ற வகையில் எம் சிந்தனை மற்றும் அறிவிற்கு வலுச்சேர்க்கும்.

**சாரல் தூறும்...,**

## மருத்துவம் போற்றுதும்

ஈ.சி.ஜி இன் அலைகள் மட்டமான பின்னர் தான் உலகின் எதிரியும் நமை காதல் செய்வான். அந்தபுண்ணிய தருணம் நெருங்கியது அவனிற்கு. ADRENALIN எவ்வளவு கொடுத்தும் அந்த இருதயம் துடிக்க மறுக்கிறது. CPRஉம் தோற்றுப் போனது. உடல் மட்டும் இருக்க உணர்வுகள் இல்லை. சிலநொடிகளிலே அவன் உடல் வெள்ளைத் துணியால் மூடப்பட்டு திரைகள் மூடப்படுகிறது. உறவுகளின் கதறல் கேட்கிறது. இத்தனைக்கும் அவனிற்கு 48 வயது. வாழ்க்கையின் ஒரு பங்கு மீதம் இருக்கிறது. சிகரெட் அவன் வாழ்க்கையை அழித்து விட்டது.

வாழவேண்டிய காலத்தை எல்லாம் புகைத்து தள்ளிவிட்டு சா வரும் நேரத்தில் அழுவதால் என்ன பயன் இருக்கிறது. 20வயதில் இருந்தே சிகரட்டின் அடிமையாகி நூறு வருடங்கள் வாழ அசைப்படுவது மிகப்பெரிய மடைத்தனம். சிலர் உல்லாசமாக இருக்க புகைப்பார்கள், சிலர் ஸ்டைலிற்காக புகைப்பார்கள், சிலரிற்கு ஏன் புகைக்கிறோம் என்று கூட தெரியாது. ஆனால் ஒவ்வொரு சிகரெட்டும் தான் வாழ வேண்டிய 11 நிமிடங்களை குறைத்துக் கொண்டு இருக்கிறது என்பதை அறிந்தும் ஓர் நாளில் பத்து சிகரெட்டை உறிஞ்சித்தள்ளும் இந்த அடிமைகள் சாவிற்கு அஞ்சாத வீரர்கள் அல்ல!

சிகரெட்டில் இருக்கும் நிக்கோட்டின் என்ற இரசாயணம் இரத்தத்தில் கலந்து மூளையையின் சிலமுக்கிய மையங்களின் நரம்புக் கணத்தாக்கத்தை தூண்டுவதால் (excitatory neuro transmitter) ஓர் புத்துணர்வு, மகிழ்வான உணர்வுகள் கிடைப்பது உண்மை. அத்துடன் குருதி ஓட்டமும் கூடுகிறது. எனவே ஒரு சில நிமிடங்கள் நிலைபெறும் இந்த தற்காலிக சிற்றின்பம் எப்படி இருக்கிறது என்பதற்காகவே பலரின் புகைத்தல் வரலாறும் ஆரம்பிக்கிறது. ஆனால் இது புலி வாலை பிடித்த கதை. ஒருமுறை அடிமையானால் மீள முடியாது. அதற்கான காரணம் இதுதான்.

நீண்ட காலத்திற்கு புகைப்பவர்கள் அவர்கள் உடலிற்கு நிக்கோட்டினை பழக்கப்படுத்தி விடுகிறார்கள். எனவே அவர்களின் உடலின் சாதாரண தொழிற்பாடுகள் கூட நிக்கோட்டின் இருந்தாலே நடைபெறும் என்ற நிலை உருவாகும் போது அவர்களால் சிகரெட் இன்றி சாதாரணமாக இயங்க முடியாத நிலை ஏற்படும். இன்னும் சிலரிடம் ஓர் நாளில் புகைக்கும் சிகரெட்டின் அளவையேனும் குறைக்க சொன்னால் "அது போக போக குறைச்சிடுவன்" என்ற பதில் தான் மிச்சம்.

இதுவம் முடியாத காரியம். அதாவது

# சிகரெட்டும் மரணத்தின் இறுதி கணங்களும்..!

சுஜன் சுகுமாரன்
3ஆம் வருடம்
மருத்துவபீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

நிக்கொட்டினின் தொடர்ச்சியான தூண்டுதல் நிக்கொட்டின் தொழிற்படும் வாங்கிகளின் அளவை குறைக்கும். (RECEPTOR DOWN REGULATION). எனவே ஆரம்பத்தில் ஒரு சிகரெட்டால் கிடைத்த உணர்வை கொண்டு வர காலப்போக்கில் இரண்டு தேவை. பின் மூன்று, நான்கு என கூடிக்கொண்டே செல்லும்.

புகைத்தலின் பாரிய பக்க விளைவு "இருமல்" என என்னிடம் சிலர் கூற நான் வேடிக்கையாய் கேட்டதுண்டு. நிக்கொட்டின் உடலின் இரத்தக்குழாய்களை சிதைப்பதால் கொழுப்பு கட்டிகள் (ATHEROSCLEROSIS) எனப்படும் படிவு குருதி குழாயின் உட்புறப்பகுதியில் உருவாகி முக்கிய அங்கங்களின் குருதி ஓட்டத்தை தடை செய்யும். எனவே இருதயத்தில் மாரடைப்பு, மூளையில் பாரிசவாதம் (STROKE) சிறுநீரக செயல் இழப்பு, கால் கைகளிற்கு செல்லும் குருதியின் அளவு தடைப்படுதல் (PERIPHERAL VASCULAR DESEASE), நுரையீரல் புற்று நோய் (LUNG CANCER) சிறு நீர்ப்பையில் புற்று நோய், (BLADDER CANCER), குடல் மற்றும் இரப்பை புற்றுநோய், உயர் குருதி அமுக்கம், அத்துடன் சுவாச நோய்கள் போன்ற பிரதான நோய்கள் ஏற்படலாம். இதில் எது நடந்தாலும் மரணம் நிகழக்கூடும்.

சிகரெட்டால் இரண்டு சிறுநீரகங்களும் செயல் இழந்த ஒருவரை எடுங்கள். அவர் உயிர் வாழ வேண்டும் எனில் மூன்று நாளிற்கு ஒரு தடவை HAEMODIALYSIS செய்ய வேண்டும். இது வாழ்க்கை முழுவதும் தொடரப்படும்.



எனவே அரச வைத்தியசாலையில் தொடர்ச்சியாக செய்ய முடியாத நிலையில் தனியார் வைத்தியசாலையில் செய்ய வேண்டுமெனில் அதற்கான செலவு 6000/= இந்த நிலையில் வறிய குடும்பத்தில் பிறந்த ஒருவனிற்கு அன்றாட வாழ்வே ஆட்டம் காண ஓர் மாதத்தில் 60000/= என்பது எட்டாக்கனி. எனவே தன் மனைவி, பிள்ளைகள் முன்பே துடிதுடிக்கஇறந்து போவான். அந்தத் தருணத்தில் அவன் வாழ எவ்வளவுதான் ஆசைப்பட்டும் மீதி நாட்களை அந்த சிகரட் எரித்திருக்கும்.

சிறு வயதிலே புகைத்தலுக்கு அடிமையாகி வாழ்வில் அனைத்தும் கூடிவரும் தருணத்தில் உடல்செயல் இழந்து தவிப்பதால் பயன் இல்லை. மாதக்கணக்கில் படுக்கையில் வீழ்ந்து, மூக்கிலே TUBE ஓடு, சிறுநீர் வழியில் கதீட்டரோடு, மருந்துகளை உணவாய் கொண்டு, குடும்பத்தோடு களிக்க கடவுள் தந்த அழகான தருணங்களை வைத்தியசாலை படுக்கையோடும், செல்ல மழலை பேசும் பிஞ்சுக் குழந்தை அருகில் இல்லை என்ற ஏக்கத்தோடும், அக்குழந்தை உண்டு மகிழ உழைப்பார் யார் உண்டு என்ற தவிப்போடும், அருகிருந்த நோயாளி நண்பன் இறந்த வேளையில் கண்களின் அச்சத்தோடும் மரணிக்கும் இவர்களை காண எமக்கும் சக்தி இல்லை...

---

# கருத்துக் கணிப்பு

கடவுள் தன்னைப்படைத்தார் என்று நம்புவது மதநம்பிக்கை. அதே கடவுள் தான் மற்றவர்களையும் படைத்தார் என்பதும் மத நம்பிக்கை.

என் கடவுளிடம் உங்களுக்காக பிரார்த்திக்கிறேன் என்பதும் மதநம்பிக்கை. ஆனால் மற்றவர்களிடம் சென்று என் கடவுள்தான் உங்களையும் படைத்தார் என்னோடு சேர்ந்து நீங்களும் அவரை பிரார்த்தியுங்கள் என்று சொல்லுவது மதத்தீவிரவாதம்.

மதத் தீவிரவாத மதமாற்றங்கள்தான் தற்போது நடைபெற்று வருகின்றன. ஆனால் இதன் பின்னால் அந்த மதமாற்ற கும்பல்களின் செயற்பாடுகள் மட்டும் தான் உள்ளனவா என்றால் அதுதான் இல்லை. அடிப்படைக்காரணமாக இருப்பது மக்களின் வறுமை. தன் வறுமையை தீர்க்க மதம் மாறினால் போதும் என்கிற ஒரு சூழல் வரும் போது அவர்களை நிச்சயமாக தவறு சொல்ல முடியாது. எனவே இங்கே அந்தந்த மதத்தை சேர்ந்தவர்களும், அந்த மதத்தலைவர்களுமே பொறுப்புச்சொல்ல வேண்டியவர்களாகிறார்கள்.

சகல மதங்களுமே அன்பை அடிப்டையாகக் கொண்டவையே் அறப்பணிகள் செய்பவையே. ஆனால் அந்த அறப்பணிகள் எல்லாரையும் சென்று கிடைக்காததால்த்தானே சிலர் அந்த வறுமையை பயன்படுத்தி மதமாற்றம் புரிகின்றனர். எனவே அறப்பணிகளை அதிகரிக்க வேண்டியதாகிறது.

மக்களின் மதரீதியான அறியாமையையும் களைய வேண்டியுள்ளது. எது அறியாமை? எந்த தெய்வமும் என்னை வணங்கினால்த்தான் அருள் புரிவேன் என்று சொல்லவில்லை. மதங்கள் மக்களை வழிப்படுத்தவே என்பதை அறிவிக்க வேண்டியுள்ளது.

அதோடு குறித்த மதத்தின் ஒரு பிரிவினர் மக்களின் வறுமையையும் அறியாமையையும் பயன்படுத்தி பிற மதத்தவரை உங்கள் மதத்திற்கு மாற்றுகிறார்கள் என்றால் அவ்வாறானவர்களை நீங்களே அடையாளம் கண்டு நிராகரிக்க வேண்டும். இலலாவிடின் மற்றைய மதத்தவர் இதில் தலையிடும் போது மதபிரிவினைகளுக்கு வழியமைத்துவிடும். உங்கள் மதத்தில் உள்ள சில களைகளை நீங்களே களைந்து விடுவதுதான் நல்லது.

அதோடு சில சந்தர்ப்பங்களில் தாமாக விரும்பி மதம் மாறுவோரும் உண்டு. அது அவர்களது உரிமை. அதன் காரணங்களை அலசினால் பத்தியின் நீளம் கூடி விடும்.

பிறக்கும் போதே தந்தையின் மதத்தை மகன் பின்பற்ற சொல்லி சொல்வதே மத மாற்றம் என்றும் சிலர் கருத்துக்கூறியிருந்தனர். ஆனால் பெற்றோர் வழியில் மதம், மொழி, கலாசாரம் என்பவை எமக்குக்கடத்தப்படுவதுதான் வழமை. அதை திணிப்பு என கூற முடியாது. அந்த மழலை தன் சிந்தனை வளர வேறு மதத்தில் ஆர்வம் இருந்தால் மாறலாம்.

மதத்திலுள்ள சாதியம் போன்ற சில குறைபாடுகளால் ஒருவனுக்கு தான் பின்பற்றும் மதத்தில் வெறுப்பு வருகிறது என்றால் நிச்சயமாக அது அந்த மதத்தின் பிழை அல்ல. மதத்தின் பிரதிநிதிகளின் பிழையே. எந்த மதமும் சாதியத்தை அங்கீகரிக்கவில்லை. ஆழமாக பார்த்தாலே இது புரிவதே இதில் உள்ள குறைபாடு. இதை நிவர்த்தி செய்ய வேண்டியது அந்தந்த



# பார்த்த ஞாபகம் இல்லையோ..!

இ.தனிஷ்ரன்

இசை, இந்தக் காசினியை கசிந்துருக வைக்கும் மன்மதபானம். மனித மனங்களின் அடைபட்டு தூசி பிடித்த பக்கங்களின் துருவேறிய கதவுகளை திறக்கச் செய்யும் மந்திரச்சாவி.

"பண்ணினேர் மொழியாள் உமை பங்கரோ
மண்ணினார் வலஞ்செய்ம் மறைக் காடரோ
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்து அருள் செய்ம்மினே"

அப்பர் பாட, காலம் காலமாய் பூட்டிக்கிடந்த திருமறைக்காட்டு திருக்கதவு பதினோராம் பாட்டில் திறந்து கொண்டது. அதே இசை, பாழ் பட்டு பூட்டிக் கிடங்கும் மனங்களுக்கெல்லாம் சந்தனம் பூசி புதுமலர் தூவி சாம்பிராணி காட்டும் இறைவனின் கானம்.

கவிதை, வாழ்வை கொண்டாடவும் பூமியை நேசிக்கவும் தெரிந்த மனிதன், சின்ன சின்ன அசைவுகளிலும் ரசனையால் மகிழ்ச்சி பொங்கி வழிபவன். கண்களிலே காதலை நிரப்பி உலகை சுகிப்பவன். அழகை ஆராதித்து ரசிக்க தெரிந்தவன் மொழியுடன் விளையாடும் சல்லாப ஊடல் கவிதை.

நல்ல ரசிகன் பாட்டு எழுதினால், அந்த வரிகள் இதயத்தை கொஞ்சும். இசையுடன் கூடிக்குலவி பிறக்கும் பாடல்கள் சகாவரம் பெறும். அப்படியான ஒரு பாடல் தான்,

"எங்கேயோ பார்த்த மயக்கம்......."

யுவனின் ரம்மியமான இசையை பஞ்சு போல வேய்ந்து நிற்கும் நா.முத்துக்குமாரின் முத்தான வரிகள். அந்த வார்த்தைகளை உச்சரிக்கும் உதித்நாராயணின் கொஞ்சும் தமிழ்.

"கவிதை ஒன்று பார்த்து போக
கண்கள் கலங்கி நானும் ஏங்க
மழையின் சாரல் என்னைத் தாக்க
விழிகள் எல்லாம் கேள்வி கேட்க...."

***

கொட்டும் மழை. இவன் மழையில் நனைந்த படி வீதியிலே நிற்க, கறுப்பு கார் ஒன்றின் ஜன்னல்க் கண்ணாடி திறந்து வெள்ளை நிற பளிங்கென ஒரு அழகு மழைத்துளிகளை முத்தமிட்டு முத்தமிட்டு சிலிர்த்து சிரிக்கிறாள்.

இவன் அப்பொழுது தான் அவளை முதன்முதலாக பார்க்கிறான். ஆனால் இதற்கு முன்னாலேயே அவளை கண்டு பேசி இணையாகி அவளோடு வாழ்ந்த உணர்வு. Deja vu.

கவிஞன் இப்படி தொடங்குகிறான்,

"எங்கேயோ பார்த்த மயக்கம்
எப்போதோ வாழ்ந்த நெருக்கம்
தேவதை இந்த சாலை ஓரம்
வருவது என்ன மாயம் மாயம்...."

வெள்ளை உடையணிந்து, வானத்து அப்சரஸே இந்த வீதியில் என் முன்னால் நிற்பது என்ன ஆச்சரியம்? ஆனால் இவளை எனக்கு முதலே நல்ல பரீட்சயம். எங்கோ எப்பொழுதோ இவளுடன் பழகிய நினைவு. இவளோடு கதைகள் பேசியிருக்கிறேன். இவளோடு சிரித்திருக்கிறேன். இவளை கட்டிக்கொண்டு அழுதிருக்கிறேன். இவளோடு சேர்ந்தே உலகை ரசித்திருக்கிறேன்.
நிச்சயமாக இவளை முன்பே தெரியும். ஆனால் இதுவரை இப்படி ஒருத்தி பற்றி எந்த எண்ணமும் என்னை சீண்டவில்லையே!
இப்பொழுது, இவளை பார்த்த இந்த நொடியில் தானே இப்படியொரு பொறி! இவளே உண்மையிலேயே முன்னர் பார்த்திருக்கிறேனா? இல்லை இது வெறும் பிரமையா?
அதென்ன? எங்கேயோ படித்திருக்கிறேனே! தேயா வூ. ஒரு சம்பவம் முதன் முதலாக அப்பொழுது தான் நடக்கும் ஆனாலும் முன்னரே அது நடந்து முடிந்ததாக தோன்றும்.
இதுவும் அதுவா?
இன்னொரு "வூ" இருக்கிறதே!
என்ன அதுது? ஞாபகம் வர மறுக்குதே!!
ஆஆஆ...! ஜமைஸ் வூ. தேயா வூ வோட எதிர்நிலை. ஒரு சம்பவம் முன்னரே நடந்திருக்கும். அதே போல மீண்டும் ஒரு சம்பவம் நடக்கும் போது, பழைய நினைவுகள் இன்றி இது புதிதாக நடப்பது போலவே தோன்றும்.
இந்த நொடி தேயா வூ வா? ஜமைஸ் வூ வா?



***

"கண் திறந்திவள் பார்க்கும் போது
கடவுளை இன்று நம்பும் மனது...."

இருக்கிறதா இல்லையா என்ற கேள்வி மனிதன் உலகில் தோன்றிய காலத்தில் இருந்தே இருப்பது. இருப்பதாகவும் இல்லையாகவும் இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்குள்ளேயே "இருக்கிறது" என்கிறது திருமந்திரம்.

"உளன்என இலன்என இவை குணம் உடைமையில்
உளன் இரு தகைமையொடு ஒழிவு இலன் பரந்தே"

இங்கே பலருக்கும் "கடவுள்" என்பதில் நம்பிக்கையே இல்லை. சமூகமும் முன்னவர்களும் சொல்லிவிட்டு சென்றதால் ஏனோ தானோ என்றே கடவுளை கும்பிடுகிறார்கள் கோவிலுக்கு போகிறார்கள். இதய சுத்தியுடன் ஒருவன் கடவுளை நம்ப வேண்டும் என்றால், அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் ஏதேனும் "அதிசயம் அற்புதம்" நடக்க வேண்டும். Does God only a miraculous worker?!

இவனும் இந்த சாதாரண கூட்டத்தவன் தான். என்னை போன்ற சுமாரான பெடியனுக்கு முன்னால் வானத்து நிலவு இறங்கி வந்து மழையை ரசிக்கிறதே!

அப்சரஸ். ரம்பா. மேனகா. ஊர்வசி. நயன்தாரா. யெஸ், கடவுள் இருக்கிறார்.

***

"இன்னும் கண்கள் திறக்காத சிற்பம்
ஒரு கோடி பூ பூக்கும் வெக்கம்..."

கண் திறந்த பின்னர் தானே சிற்பமே உயிர் கொள்ளும்? இவள் கண் திறக்காத போதே கொள்ளை அழகு. கண் திறந்து விட்டால், அழகே ஆச்சரியப்படும் பேரழகு. தலைவன் கை தீண்ட வெட்கி குழையும் தலைவி போலவே ஆதவன் கரம் பட்டு சிலிர்க்கும் மலர்களும். அதே மலர்களின் கோடி வெட்கத்தை ஒன்றாக்கி வெட்கிக்கிறாள் இந்த தேவதை.

"ஆண் மனதை அழிக்க வந்த சாபம்
அறிவை மயக்கும் மாய தாகம்.."

பொதுவாக பெண்ணுக்கு காதல் எப்பொழுதுமே வரம் தான். ஆனால் ஆண்களுக்கோ இது வரமா? சாபமா? என்ற கேள்வியினாலேயே, காதல் இதயத்தை குத்திக் கிழித்து இரத்தத்தை சொட்ட வைக்கும். அவனது சிந்தனை வலுவை முற்றாக செயலிழக்கச் செய்யும். நரம்புகள் எல்லாம் காதலி பெயரையும் காதலி முகத்தையும் மட்டுமே மூளைக்கு அஞ்சல் செய்யும்.

"ஆதி அந்தமும் மறந்து
உன் அருகில் கரைந்து நான் போனேன்..."

அவளை தாண்டி சிந்திக்க முடியாமல் மூளை மூச்சுத்திணறும். காதுக்கு கீழே தாடை வரை ஏதோ வலி பரவும். தொண்டையினுள் இறுக்கம். இதயத்தில் இரத்தம் கசிவதாய் வலி ஆனாலும் ஒரு சுகம். ஆண்களுக்கு காதல் அப்படித்தான்.

"கனவுகளில் வாழ்ந்த நாளை
கண் எதிரே பார்க்கிறேன்
கதைகளிலே கேட்டப் பெண்ணாய்
திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன்..."

எங்கே? எங்கே? மனம் அலைபாய்கிறது. சொப்பனத்தில் வந்த சுந்தரியோ? இல்லை கதைகளிலே கேட்ட இஸ்திரியே?



"ஆண்கள் வெக்கபடும் தருணம்
உன்னை பார்த்த பின்பு நான் கண்டு கொண்டேன்..."

வெட்கம் பெண்ணுக்கு சொந்தமானது. எந்த பைத்தியக்காரன் சொன்னது அப்படி? ஆண்களே! காதலித்து பாருங்கள், "பெண் வெட்கமா ஆண் வெட்கமா அழகு" என்று பட்டிமன்றமே செய்யலாம்!

***

"இடி விழுந்த வீட்டில் இன்று
பூச்செடிகள் பூக்கிறதே....."

இடி விழுந்த வீடு. முகடு பிரிந்து சிதைந்து கிடக்கிறது. ஓடுகள் நொருங்கி அங்கும் இங்குமாய் சிவப்பும் கறுப்புமாக பரவிக் கிடக்கிறது. கல்லும் மண்ணும் சீமெந்தும் சிந்திச்சிதறி கிடக்கிறது. தீராந்தி, குறுக்கு மரம், சலாகை, மூலைக்கட்டை, சீட் தடி, சன்செட் பலகை, கதவு, ஜன்னல் எல்லாம் இடியின் வெப்பத்தில் கருகி, பாதிக்கு மேல் எரிந்து உடைந்து விழுந்திருக்கிறது. ஜன்னல் கம்பிகள் உருகி வளைந்திருக்கிறது. தூசியும் கரியுமாக பல வருடங்களின் முன்னரே, இடி விழுந்து கை விடப்பட்ட வீடு அது. அங்கே ஒரு மூலையில், ஏதோ பறவையின் எச்சத்திலே மூளைத்த செடி. பூச்செடி. பூத்திருக்கிறது. சந்தோஷ சாரல்.



"இவள் தானே உந்தன் பாதி
கடவுள் பதில் கேக்கிறதே....."

இவள் என்னவள். இவளோடு நான் வாழ்ந்திருக்கிறேன். ஆனால் எங்கு என்று ஞாபகம் வருகுதில்லையே!

கடவுளே! யார் இவள்? முன்னர் எங்கு சந்தித்தேன் இவளை?
மானிடா! இவள் உந்தன் அர்த்தநாரி தானே?

"வியந்து வியந்து உடைந்து உடைந்து
சரிந்து சரிந்து மிரண்டு மிரண்டு
இந்த நிமிடம் மீண்டும் பிறந்து
உனக்குள் கலந்து தொலைந்து
தொலைந்து...."

எங்கேயோ பார்த்த மயக்கம்.
எப்போதோ வாழ்ந்த நெருக்கம்.

# கொரோனா அபத்தமும் சுயகற்றலின் தேவைப்பாடும்

கொரோனா வைரஸ் பரவுகையும் அதுசார்ந்த பாதுகாப்பை மையப்படுத்தி அமுலாக்கப்பட்டு உள்ள சமூக முடக்க நடைமுறைளும் பலதரப்பட்ட மாற்றங்களை அரங்கேற்றி வருகின்றது. இலங்கையில் 2020 மார்ச்13 முதல் கல்வி நிலையங்கள் முடக்கப்பட்டது. மே மாதத்துடன் இரண்டு மாதங்களாகின்ற சூழலிலும் இலங்கையில் கல்வி நிலையங்களை மீள ஆரம்பிப்பதற்கான சுமூகமான சமிக்ஞைகள் உரிய தரப்புகளிடம் இருந்து இதுவரை வரவில்லை. மாறாக மாற்று வழிகளே ஆலோசிக்கப்படுகின்றது. இலங்கையில் ஆலோசிக்கப்படும் மற்றும் செயற்படும் மாற்று வழிகள் இலங்கையின் சிறப்பான இலவசக்கல்வியை சிதைப்பதாக அமைகின்றது. அதனடிப்படையில் எம்சமூகத்துக்கு பொருத்தமான சுயகற்றல் வழிமுறையை தேடுவதாகவே குறித்த கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகலை மீள ஆரம்பிப்பது ஆபத்தானது என்று சுகாதார திணைக்களம் மற்றும் வைத்தியர் சங்கங்கள் எச்சரித்து வருகின்றனர். இந்நிலையிலேயே இலங்கையில் நீண்ட நாட்களாக அமுல்படுத்தப்பட்ட சமூக முடக்கம் மே11 உடன் தளர்த்தப்பட்ட போதிலும் கல்வி நிலையங்களை ஆரம்பிப்பதில் உரிய தரப்பினர் தயக்கம் காட்டி வருகின்றனர். எனிலும் நீண்டகால தொடர்ச்சியான விடுமுறை என்பது மாணவர்களினை பெரிதும் பாதிக்கக்கூடியதாகும். இந்த சூழ்நிலையில் மாணவர்களிற்கான கல்வி செயற்பாட்டை தொடர்ச்சியாய் நடாத்த இணையவழி கல்வி செயற்பாட்டிற்கு இலங்கையில் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். ஆயினும் இதன் பின்னால் உள்ள குறைபாடுளை சரியாய் பகுப்பாய்வு செய்ய மறந்து போயுள்ளார்கள்.

மேற்குலகை சேர்ந்த அபிவிருத்தியடைந்த நாடுகளில் சாதாரண காலங்களிலேயே இணையவழி கல்வியானது முதிர்ச்சி பெற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. ஆதலால் கொரோனா வைரஸ் முடக்க காலத்தில் அதன் பயன்பாடு மாணவர்களுக்கு கடினமான மாறுபட்ட சூழலை ஏற்படுத்தாது. எனிலும் அம்முறையை வளர்ச்சியடைந்து வரும் நம் நாடுகளில் பயன்படுத்த முனைகையில் எம் சமூக பொருளாதார நிலைப்பாடுகளை சீர்தூக்கி பார்க்க வேண்டி உள்ளது.

இலங்கை வளர்ச்சியடைந்து வரும் நாடாகவும், 1980களுக்கு பின்னர் நீண்ட ஆயுதப்போராட்ட வரலாற்றால் முடக்கப்பட்ட தேசமாக காணப்படுகின்ற போதிலும் எழுத்தறிவு வீதம் 92.6% உடன் முன்னிலையில் இருப்பதற்கு இலங்கையில் இலவசக்கல்வியே காரணமாகின்றது. ஏழை மக்களும் தங்கள் கல்வியறிவூடாக முன்னேற இலங்கையின் இலவசக்கல்வியே வழிவகுத்துள்ளது. இலங்கையில் ஏழை மக்களும் கல்வியறிவை பெற்று வருகின்றனர் என்பதை திட்டங்களை வகுப்போர் கருத்தில் கொள்ள வேண்டும். அதிலும் வடக்கு-கிழக்கு மக்கள் யுத்த வடுக்களிலிருந்து மீட்கப்படாதோர் அவர்களின் பொருளாதார நிலைகளையும் கருத்திற் கொண்டே இலங்கையில் கொரோனா முடக்க கால கல்வி கொள்கையை வகுக்க வேண்டியது அவசியமாகிறது. மாறாக மேற்குலக பாணியை முழுமையாக பிரதி செய்யின் அப்பயன் ஒரு தரப்பிற்கே பலன் கிடைக்கும். பெரும்பான்மையான மக்கள் கல்வியறிவை பெறுவதில் சிரமம் காணப்படும். இலங்கையில் கொரோனாவுக்கு முன்னரே சமீபகால கல்விக்கொள்கைகள் படிப்படியாக இலவசக்கல்வியை சீரழிக்கும் செயற்பாடுகள் உள்வாங்கப்பட்டு வருவது அறிந்ததே. இந்நிலையில் ஏழை மாணவர்களின் பிரச்சினைகளை கருத்திற் கொள்ளாது கொரோனா வளர்த்துவிடும் இணையவழிக்கல்வி ஏற்பாடு இலங்கையின் இலவசக்கல்வி முறைக்கு முழுமையாக முழுக்கு போட்டுவிடுமோ என்ற அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. இது ஓர் அபாயகரமான நகர்வாகும்.

இணையவழிக்கல்வி ஓர் முன்னேற்றகரமான பாதை என்பது மறுதலிக்க முடியாத உண்மையாகும். இன்று உலகம் உள்ளங்கையுக்குள் சுருக்கப்பட குறித்த இணையமே காரணமாகின்றது. பல கற்கை நெறிகள் ஆங்கிலத்திலும் பிற மொழியிலும் இணையப்பரப்பில் குவிந்து காணப்பட தமிழில் போதியளவு காணப்படவில்லை என்ற குறை அதிகமாகவே காணப்பட்டது. அந்நிலையை கொரோனா கால இணையவழிக்கல்வியின் அதிகரிப்பு குறைத்துள்ளது. நிறைவாக தமிழ்மொழியிலும் கற்கைநெறிகளை இணையத்தில் தேடி பெற வாய்ப்பை உருவாக்கி கொடுத்துள்ளது. இணையவசதியை பெற கூடியவர்களுக்கு வரமாகவே காணப்படுகின்றது. எனிலும் நாம் இணையவழிக்கல்வியின் முழுமையான பயனை பெற நாடு தொலைத்தொடர்பு அபிவிருத்தியில் இன்னும் பலபடி நகரவேண்டியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மேற்குலகு நாடுகளுடன் எங்களது இணையவேகத்தை ஒப்பிட முடியாது. இன்றும் எங்களுடைய பல பிரதேசங்களில் இணையவசதிகள் போதியளவு காணப்படவில்லை என்பதை கல்விக்கொள்கையை வகுப்போர் நடைமுறைப்படுத்துவோர் கருத்திற்கொள்ள வேண்டும். இணையவழிக்கல்வியை நடைமுறைப்படுத்த முயல முதல் இலங்கை அரசாங்கம் நாடு பூராகவும் சீரான வேகத்தில் இணையவசதியினை ஏற்படுத்தி கொடுக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.

ஏப்ரலில் வெளியாகிய 2019ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் முடிவுகளில் வடமாகாணம் 9வது இடத்தில் இருப்பது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பரவலாக பேசப்படுகின்றது. சென்ற ஆண்டும் முடிவுகள் வெளியான சில காலம் மாகாண இருப்பு தொடர்பில் விவாதிப்போடு நிறுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்று கல்வி நிலையங்களும் முடக்கப்பட்டுள்ள சூழலில் எமக்கான சரியான சுயகற்றல் ஏற்பாடுகள் தொடர்பில் இதுவரை ஆரோக்கியமான உரையாடல் எம் சமூகத்தில் ஆரம்பிக்கப்படவில்லை என்பது கவலைக்குரியதாகும்.
கொரோனா அபத்தத்தில் கல்வி நிலையங்கள் முடக்கப்பட்டுள்ள சூழலிலும் இணையவழிக்கல்வியை ஆதாரமாக கொண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்கான தயார்ப்படுத்தல்களை பரீட்சை திணைக்களம் மேற்கொள்கிறது. அதனடிப்படையில் இன்னும் மூன்று மாதங்களில் க.பொ.த உயர்தரப்பரீட்சைகள் நடைபெற உள்ளது. இந்நிலையில் வடக்கு-கிழக்கின் பெறுபேற்றை உயர்ந்த ஆரேக்கியமான பரந்த ஆலோசனைகள் அவசியமாகின்றது.
யாழ்ப்பாணத்தில் ஓர் வைத்திய நிபுணர் தன்னார்வமாக க.பொ.த உயர்தரத்தை சேர்ந்த மாணவர்கள் யாருக்காவது தற்போதைய இணையவழிக்கற்கையை தொடர போதிய வசதி காணப்படவில்லையாயின் தன்னை அணுகுமாறும் தான் அதற்கான உதவியை செய்து தருவதாகவும் கூறியுள்ளார். குறித்த தன்னார்வ சேவையாளரின் பணி பாராட்டுக்குரியது. மேலும் தமிழ் சமூகம் பல வைத்திய நிபுணர்களையும், பொறியியலாளர்களையும், மற்றும் பேராசிரியர்களையும் கொண்டுள்ள சமூகம். சாதரண மக்களையும் தாண்டி கல்வியின் தேவையை ஆழமாக உணர்ந்த அவர்களும் குறித்த வைத்திய நிபுணர் போன்ற செயற்பாட்டுக்கு முன்வரலாம்.



ஐ.வி.மகாசேனன்

சுயகற்றல் என்பது மாணவர்கள் தங்களது திட்டமிடலின் கீழ் தங்கள் ஆற்றலுக்கேற்றவாறு திட்டமிட்டு கற்றலை தொடர்வதாகும். சுயகற்றலே புத்தாக்க சிந்தனைகளை உருவாக்க கூடிய ஏற்பாடாகும். எம்மிடத்தில் புத்தாக்க சிந்தனையாளர்கள் குறைந்து செல்வதற்கு பிரதான காரணமே சுயகற்றலற்ற தேர்ச்சி மட்டத்தை நோக்கி ஓடும் மாணவர் சமூகத்தின் உருவாக்கமே ஆகும். அக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய கொரோனா அபத்த காலம் சரியான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. சீரான திட்டமிடலுடன் சுயகற்றலுக்கான வழிவகைகளை மாணவர்களுக்கு ஏற்படுத்தி கொடுப்பின் எம்மிடமிருந்தும் புத்தாக்க சிந்தனையாளர்கள் தோற்றம் பெறுவார்கள்.

இணையவழிக்கற்றலுக்கு மாற்றீடான ஏற்பாடுகளை எம்சமூகம் சிந்திக்க வேண்டும். கடந்த காலங்களில் யுத்தங்களினுள்ளும் கல்வி கற்று எழுச்சி பெற்ற சமூகம் தான் எம் தமிழ் சமூகம். புதிய இணைய மோகம் தான் பலரை குழப்புகின்றது. ஏழ்மையிலும் கல்வி ஆர்வமுடைய மாணவர்கள் குறித்த இணைய ஏற்பாடுகளை பெற முடியவில்லை என எண்ணி கல்வியை இழந்துவிடாதீர்கள். இணையம் கல்வி கற்பதற்கான ஓர் உசாத்துணையே என்பதையும் மறவாதீர்கள். எம் முன்னைய தலைமுறையை சேர்ந்த பலரும் கடந்தகால வினாத்தாள்களை சுயமாக மீட்டி பார்த்து அதனூடகவே சிறந்த பெறுபேறுகளை யுத்த காலங்களிலுள்ளும் பெற்று வந்துள்ளனர். ஆக இணைய வசதி பெற முடியாதோர் அதனை நினைத்து வருந்தாது கடந்தகால பரீட்சை வினாக்களை சுயகற்றலில் மீட்டு பாருங்கள். அதற்கான வசதியையும் மாகாண கல்வித்திணைக்கள நிர்வாகிகள் செயற்படுத்த வேண்டும். இணையவழிக்கல்வி காணொளி தயாரிப்பில் ஈடுபடும் தன்னார்வாளர்களும் ஏழை மாணவர்களும் கற்க கூடிய வகையில் இலவச குறிப்பு தொகுதிகளையும் வழங்க ஏற்பாடு செய்வீர்களாயின் பொறுப்புடைய செயற்பாடாக அமையும்.

உலகளாவில் இடம்பெறும் கொரோனா கால கல்வி பிரச்சினைகள் தொடர்பில் யுனெஸ்கோ இயக்குநர் ஜெனரல் ஆட்ரி அஸலாய், “பின்தங்கிய குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பள்ளி மூடல்களால் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.” என்று குறிப்பிட்டுள்ளார். நாளைய இருப்புக்கான மூலதனம் கல்வியே என்பதை பல உலக வரலாறுகளும் உணர்த்தியுள்ளது. ஈழத்தமிழரும் அதை உணர்ந்து செயற்படினேயே நாளைய இருப்பை உறுதி செய்யலாம். கொரோனா அபத்தத்திலிருந்து மாணவர்களின் கல்வியை பாதுகாக்க மாணவர்களின் சுயஆற்றலை விருத்தி செய்யக்கூடிய சுயகற்றலுக்கான வாய்பை திறந்து விட முயற்சி செய்வோம்.



# யுவராஜ் சிங் எனும் யுக வீரன்

அக்னி

இந்திய கிரிக்கெட் வரலாற்றில் கபில் தேவ், கவாஸ்கர், டெண்டுல்கர், கங்குலி, டிராவிட், கும்ப்ளே எனும் ஜாம்பவான்கள் வரிசையில் யுவராஜ் சிங் என்ற பெயரும் பொன் எழுத்துக்களால் எழுதப்பட வேண்டியதே. இந்திய கிரிக்கெட்டிற்கு யுவராஜ் சிங் பெற்று கொடுத்த கௌரவங்கள் ஏராளம். மற்றைய இந்திய வீரர்கள் போல் அல்லாது யுவராஜ் சிங் எப்போதும் தனித்து தெரிய காரணம் அவருக்கே உண்டான மிடுக்கான பார்வையும் போராட்டக்குணமுமே ஆகும். புற்றுநோயுடன் உலகக்கோப்பை தொடர் முழுவதும் ஆடி இந்திய அணிக்கு கிண்ணத்தை பெற்றுக் கொடுத்த இந்த யுகவீரனை கொண்டாட வேண்டிய அவசியத்தை பார்க்கலாம்.

யுவராஜ் சிங் 1981 டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி சண்டிகரில் பிறந்தார். யுவராஜ் சிங் இன் தந்தை யோகராஜ் சிங் இந்திய அணிக்காக குறுகிய காலம் விளையாடிய ஒரு வேகப்பந்து வீச்சாளர், அத்தோடு திரைப்பட நடிகர் என வசதியான பிள்ளையாகவே பிறந்தார் யுவராஜ் சிங். வசதியான குடும்பத்தில் பிறந்தாலும் சிறுவயதில் யுவராஜ் சிங் இற்கு கிரிக்கெட் மீது எந்த ஆர்வமும் இருக்கவில்லை. டென்னிஸ் மற்றும் roller skating எனப்படும் சறுக்கல் விளையாட்டில் மிகவும் ஆர்வமாக இருந்தார் யுவராஜ் சிங். இந்த ஆர்வம் 14 வயதுக்கு உட்பட்ட இந்திய அளவிலான roller skating போட்டியில் யுவராஜ் சிங் ஐ




சம்பியனாக்கியது. ஆனாலும் குறுகிய காலம் மட்டுமே இந்திய அணிக்காக ஆடிய யோகராஜ் சிங், தனது மகன் இந்திய அணிக்காக நீண்ட காலம் கிரிக்கெட் ஆட வேண்டும் என ஆசைப்பட்டார். தந்தையின் ஆசைக்கு கட்டுப்பட்ட யுவராஜ் சிங், கிரிக்கெட் ஆட சம்மதித்தார். ஆரம்பத்தில் யுவராஜ் சிங் ஐ கிரிக்கெட் கற்றுக்கொள்ள பஞ்சாப் இல் இருந்த இந்திய அணியின் முன்னாள் வீரர் நவ்ஜோத் சிங் சித்துவின் பயிற்சி கூடத்தில் சேர்த்து விட்டார் யோகராஜ். ஆனாலும் யுவராஜ் சிங் full toss பந்துகளில் கூட ஆட்டமிழந்து விடுகிறார் என்று சித்து பயிற்சி அளிக்க மறுத்துவிட்டார். சற்றும் தளராத யோகராஜ் தானே மகனுக்கு பயிற்சி வழங்கும் பொறுப்பை கையில் எடுத்து கொண்டார். மெல்ல மெல்ல யுவராஜ் சிங் இற்கு கிரிக்கெட் நுணுக்கங்களை கற்றுக்கொடுத்தார் யோகராஜ் சிங்.

யுவராஜ் சிங் இன் கிரிக்கெட் ஆரம்பம். பாடசாலை அணிகளில் கிரிக்கெட் ஆட தொடங்கிய யுவராஜ் சிங், கிரிக்கெட் நுணுக்கங்களை கற்றுக்கொண்டு மிக நேர்த்தியாகவும் அதிரடியாகவும் ஆடத்தொடங்கினார். இதன் காரணமாக 13 ஆவது வயதிலேயே 16 வயதுக்கு உட்பட்ட பஞ்சாப் அணியில் இடம்பிடித்தார். யுவராஜ் சிங் காட்டிய அதிரடி அவரது 15 ஆவது வயதில் 19 வயதுக்கு உட்பட்ட பஞ்சாப் அணிக்குள் உள்வாங்க காரணமாக இருந்தது. 15 ஆவது வயதிலேயே Himachal Pradesh அணிக்கு எதிராக அதிரடியாக ஆடி ஆட்டமிழக்காமல் 137 ஓட்டங்களை குவித்தார். இந்த போட்டியின் மூலம் தனது பெயரை கிரிக்கெட் அரங்கில் ஆழமாக பதிக்க ஆரம்பமாகி இருந்தார் யுவராஜ் சிங். தொடர்ச்சியான சிறப்பான பெறுபேறுகள் மூலம் தனது முதல் தர போட்டிக்கான கதவை வெறுமனே 16 வயதில் பஞ்சாப் அணி மூலம் திறந்து கொண்டார் யுவராஜ். ஆனாலும் முதல் போட்டியில் ஓட்டம் எதுவும் பெறாமல்



ஆட்டமிழந்தார் யுவராஜ். சில சறுக்கல்கள் பஞ்சாப் அணியில் நிரந்தர இடம் பெற முடியாமல் தவித்து கொண்டு இருந்தார் யுவராஜ். சற்று இடைவெளியின் பின்னர் யுவராஜ் சிங் என்ற பெயரை நிலை நாட்ட அவருக்கு கிடைத்த பொன்னான வாய்ப்பு 19 வயதுக்கு உட்பட்டோருக்கான Cooch Beher trophy. 1999 ஆம் ஆண்டு நடந்த இந்த தொடரில் பஞ்சாப் அணிக்காக ஆடி கொண்டு இருந்தார் யுவராஜ் சிங். இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது பஞ்சாப். அனைவரது கவனத்தையும் யுவராஜ் ஈர்த்து கொண்டது இந்த இறுதிப்போட்டியில் தான். பீகார் அணிக்கு எதிரான அந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பீகார் அணி 357 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணிக்கு யுவராஜ் சிங் மாத்திரம் 358 ஓட்டங்களை குவித்தார். இறுதிப்போட்டியில் ஆடிய இந்த அதகளமான ஆட்டம் மற்றும் ஏற்கனவே



குவித்து வைத்திருந்த ஓட்டங்கள் தேர்வாளர்கள் கவனத்தை ஈர்க்க இந்திய அணிக்காக ஆட வேண்டும் என்ற யோகராஜ் சிங் இன் கனவை நனவாக்கியது என்றே சொல்ல வேண்டும். ஆம் இலங்கை இளையோர் அணிக்கு எதிராக ஆடுவதற்கான இந்திய இளையோர் அணிக்காக ஆட தெரிவாகி இருந்தார் யுவராஜ் சிங்.

ஆட்டம் தொடரும்....


## நீங்களும் எழுதலாம்!

எழுத்தார்வம் கொண்ட இளையவரா நீங்கள்?

இணைந்து கொள்ளுங்கள் தூமியின் இணைய இதழுடன்!!!

உங்கள் ஆக்கங்களை பிரசுரிக்க தூமியின் இணைய இதழ் களம் அமைத்து தருகிறது!!!

அனுப்ப வேண்டிய முகவரி
thumi2016@gmail.com


இவ்மின்னிதழ் தூமி அமைப்பினரால் 2020.05.16 அன்று தூமி அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டது.